gistered No. M. 2330  'SIDDHANTHAM'
Vol. 24—No. 10

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

ர். 24 | கர ஐப்பசி 1951 அக்டோபர் | இதழ் 10

உள்ளுறை



பத்திராசிரியர் : சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.

உதவிப் பத்திராசிரியர் : வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை

சைவ சித்தாந்த மகா சமாஜம்
40, முத்தையா முதலி தெரு, வேளாளதேனாம்பேட்டை, சென்னை-6

## சமாஜ 46-வது ஆண்டுவிழா

29-9-51 மாலை குன்றக்குடி - திருவண்ணாமலை ஆதீன மடத்தில் சின்னபட்டம் திருப்பெருந்திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகளவர்களின் தலைமையில் சைவ அன்பர்கள் கூட்டம் நடைபெற்றது. சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 46-வது ஆண்டு விழாவை, குன்றக்குடியில் டிசம்பர்மீ 22, 23, 24 தேதிகளில் நடத்துவதென்றும், அதற்காக ஒரு வரவேற்புக் குழுவும் அமைக்கப்பெற்றது. தலைவர், சொற்பொழிவாளர்கள், ஏற்பாடுகள் முதலியன பற்றி ஆலோசிக்க வரவேற்புக் குழுக் கூட்டம் 14-10-51 குன்றக்குடியில் மாலை 3 மணிக்கு நடைபெறும். விவரங்கள் அடுத்த இதழில் வெளிவரும்.

---

## சமாஜ செயற்குழுக் கூட்டம்

1951 அக்டோபர் 21-ம் நாள் ஞாயிறு மாலை 4 மணிக்கு இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரம்மணிய பக்தஜன சபையில் குன்றக்குடி மகாநாட்டைப் பற்றி ஆலோசனை செய்யச் செயற்குழு கூடும்.

---

Reg. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 24 | கர ஐப்பசி 1951 அக்டோபர் | இதழ் 10

## நாட்டு ஒலி

1. அறநிலையங்கள் : அறநிலையங்களைப் பற்றி அடிக்கடி எழுதியிருக்கின்றோம். இப்பொழுதும் எழுதவேண்டி இருக்கின்றது. அதற்குக் காரணம் நமது அரசியலார் ஏற்படுத்தியிருக்கும் புதுச்சட்டம்தான். அச்சட்டம் தற்போது நிறைவேறிவிட்டது. அதனை ஜனாதிபதியும் ஊர்ஜிதப் படுத்திவிட்டார். இந்தத் திங்கள் முதற்கொண்டு அது செயல் முறைக்கு வரப்போகின்றது. ஆகவே அதைப் பற்றிச் சமயச் சஞ்சிகையாகிய நமது தாளில் ஒன்றிரண்டு கருத்துக்களைக் குறிக்க வேண்டாமா ? நமது சமயத்தார்கள் எல்லாரும் இந்தச் சட்டத்தால் கட்டுப்படப் படுவதனால் நம்மில் ஒவ்வொருவரும் தம் தம் கருத்துக்களை வெளியிட்டு இனி என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டியது கடமை அல்லவா ?

அறநிலையங்கள் ஒவ்வொரு நாட்டிலும் உண்டு. நமது நாட்டிலும் மிக உண்டு. அவைகள் இரண்டு பகுதிகளாக இருக்கின்றன. சமயச் சார்பு உள்ளவைகள், சமயச் சார்பு அற்றவைகள் என இரண்டு பகுதிகளாகத் தோற்றம் தருகின்றன. இந்நிலையங்களில் பொருள் சம்பந்தம் இல்லாது இருக்குமாகில் இவைகளைப் பற்றி எவரும் அக்கறை எடுத்துக்கொள்ள மாட்டார்கள். பொதுமக்களே யன்றி அரசியலாரும் ஒருவிதமான முயற்சியும் எடுத்துக்கொள்ள

மாட்டார்கள். பரமாத்மிகமாக அவைகளை நோக்கும்போது அவைகளுக்கும் பொருளுக்கும் சம்பந்தம் இருக்காது. லௌகிகமாகப் பார்க்கும் பட்சத்தில் அவைகளுக்கும் பொருளுக்கும் அளவற்ற சம்பந்தம் உண்டு. எங்கே பொருள் இருக்கின்றதோ, அங்கே மக்களுடைய ஆர்வமும் அரசியலாரின் நாட்டமும் இருக்கும். ஆகவே நம் நாட்டு அறநிலையங்களில் அரசாங்கம் நுழைந்தது ஒரு வியப்பு அல்ல.

ஏனைய நாடுகளில் உள்ள அறநிலையங்களின் பாதுகாப்பிற்கும் நமது நாட்டு அறநிலையங்களின் பாதுகாப்பிற்கும் மிகுந்த வேற்றுமை உண்டு. பிறநாடுகளிலோ சமய நிலையங்களைச் சமய ஊழியர்களே பாதுகாக்கிறார்கள். மற்ற அறநிலையங்களைப் பொதுமக்களின் பிரதிநிதிகள் பாதுகாக்கிறார்கள். சென்னை அரசாங்கத்திலோ அவ்வாறு இல்லை. அரசாங்கமே இந்த இரண்டு பாதுகாப்புகளையும் ஏற்றுக்கொண்டு இருக்கின்றது. சமய ஊழியர்களும் அறஞ்செய்வார்களும் அரசாங்கத்திற்குத் தலைவணங்க வேண்டி இருக்கின்றார்கள். தலைவணங்குதல் மட்டும் அன்று. தலைகொடுக்கவும் கடமைப்பட்டு உள்ளார்கள். இந்த வேற்றுமை நமது சென்னை அரசாங்கத்தில் அன்றி வேறு இடங்களில் காணப்படுகின்றதா? பாரதநாட்டின் மற்றப் பிரதேசங்களில் அறநிலையச்சட்டங்கள் ஏற்படவில்லை. பாகிஸ்தானத்திலும் கூட இஸ்லாமிய சமய ஆட்சி இருந்தபோதிலும் இங்கே இருக்கும்படியான அழுத்தல் அங்கே இல்லை. ஆகவே, வேறுபாடு இங்கே சிறந்திருக்கிறது அல்லவா! இதற்கு யாது காரணமோ!

அறநிலையங்களின் ஆட்சியைப் பற்றி இதற்குமுன் பலமுறை எழுதியிருக்கின்றோம். ஆகவே அவைகளைப் பற்றி மீண்டும் எழுத வேண்டியதில்லை. அண்மையிலே நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைப் பற்றி மட்டும் இங்கே குறிப்போம்.

ஆங்கில ஆட்சியில் காங்கிரஸ் அமைச்சு அதிகாரத்தில் இருந்தபோது சுகாதார அமைச்சர் அறநிலையங்களையும் பாது

காத்து வந்தார். மாந்தர்களுடைய உடல்களைப் பற்றி அக்கறை எடுத்துக்கொள்ளும் ஒரு அமைச்சர் அவர்களுடைய உயிரைப்பற்றியும் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டாமா? இந்தக் காரணத்தைக் கொண்டோ அல்லது வேறு காரணத்தைக் கொண்டோ சுகாதார அமைச்சர் சமய நிலையங்களின் பாதுகாப்பை ஒழுங்குபடுத்த எண்ணி ஒருதீவிரமான திருத்தல் மசோதாவைக் கொண்டுவந்தார். அதற்கு நாடு முழுவதும் நிரம்ப எதிர்ப்பு இருந்தது. அவர் எண்ணின படி விரைவாக மசோதாவைச் சட்டமாக்க முடியவில்லை. பிறகு காங்கிரஸ் ஆட்சி நிறுத்தப்பட்டுப் போக ஆங்கிலர்கள் நேரிடையாக ஆட்சி நடத்தினார்கள். அவர்கள் நாட்டு மக்களுடைய சமயக் கொள்கைகளில் நுழைய விரும்பவில்லை. ஆகவே, மசோதாவை நிறுத்திவிட்டார்கள். பெரும்போர் நின்ற பிறகு நாட்டிற்குத் தன்னுரிமை கிடைத்ததும் காங்கிரஸ் ஆட்சி மீண்டும் வந்தது. முந்தியிருந்த சுகாதார அமைச்சரே மீண்டும் அறநிலையங்கட்குத் தலைவர் ஆனார். தான் விட்டுச் சென்ற மசோதாவை மறுபடியும் நுழைக்கத் தொடங்கினார். வெகுநாள் விவாதம் நடந்தது. மக்கள் எதிர்ப்பு வலுத்து இருந்தது. ஆனால் பெரும்பான்மையில் காங்கிரஸ் கட்சியார் இருந்ததினால் சட்டம் நிறைவேறிற்று. ஜனாதிபதியின் அங்கீகாரத்திற்கு அது அனுப்பப்பட்டது. அவரோ சிறிது தயங்கினார். என்றாலும் அமைச்சரின் பிடிவாதமே வெற்றி யடைந்தது. சட்டமும் 27-8-51-ல் அங்கீகாரம் பெற்றது. தாம் வெற்றி யடைந்ததும் அமைச்சர் ஓய்வு பெற்றுக்கொண்டார். காரியம் சித்தி அடைந்ததல்லவா? அது போதும். மக்களுக்கு ஓய்வேது? அவர்கள் அதற்குக் கட்டுப்பட வேண்டியவர்கள் ஆனார்கள். இந்த நிலைமையில் நாம் நிற்கிறோம்.

**2. புதுச் சட்டம்:** இப்போது இயற்றப்பட்டிருக்கும் புதுச்சட்டம் இந்து சமய நிலையங்களுக்கு மட்டுமன்றி சமண நிலையங்களுக்கும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது இந்து சமய நிலையங்களில் சைவ வைணவ ஆலயங்களும் கிராம தேவதை ஆலயங்களும் அவைகளுக்குச் சேர்ந்த

கட்டளைகளும் மடங்களும் அடங்கும். அதுபோலவே சமண நிலையங்களில் சமண ஆலயங்களும் மடங்களும் அடங்கும். ஆகவே, சென்னை அரசாங்கத்தின் கீழ் உள்ள கிறிஸ்துவ இஸ்லாமிய நிலையங்களைத் தவிர மற்ற எல்லா சமய நிலையங்களும் இச்சட்டத்தின்கீழ் ஆளப்படும். இப்போது புதிதாகச் சேர்க்கப்படுவது சமண நிலையங்கள் ஆகும். இந்நிலையங்கள் தென்னாட்டில் மிகுதியாக இல்லாமற் போன போதிலும் தென் ஆர்க்காடு வட்டத்தில் சில சிறந்த கோயில்களும் கோயமுத்தூர் வட்டத்தில் சில சிறிய ஆலயங்களும் தென்கன்னடம் வட்டத்தில் சில சிறந்த ஆலயங்களும் உண்டு. இவைகள் எல்லாம் இனிமேல் இச்சட்டத்தின் ஆக்ஞைக்கு உட்படும்.

மற்றொரு சிறந்த மாறுதல் என்னவென்றால் சமயச் சார்பல்லாத அறநிலையங்கள், இச்சட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டதே ஆகும். அப்படிப்பட்ட அறநிலையங்கள் தமிழ் நாட்டில் நிரம்ப உண்டு. ஆவணி மாதத்துச் சித்தாந்த இதழில் இந்நிலையங்களைப் பற்றிய குறிப்பு ஒன்றை வெளியிட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட அறநிலையங்களைத் தென்னாட்டில் பண்டைய மன்னர்களும் தனவந்தர்களும் கணக்கற்ற நிலையில் ஏற்படுத்திவிட்டுச் சென்றிருக்கிறார்கள். யாத்திரிகள் புனித ஸ்தலங்களுக்குச் செல்லும் பாதைகளில் எல்லாம் தங்குமிடங்கள், உணவு வசதிகள், மருத்துவ வசதிகள் முதலிய வசதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவைகள் பொதுவாகச் சத்திரங்கள் எனப்படும். ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு சத்திரம் இருந்தது. அச்சத்திரங்களை ஆதரிப்பதற்காக வருமானம் வரக்கூடிய நிலங்களைத் தானம் செய்திருந்தார்கள். இவ்விதச் சத்திரங்களுக்கு வரிவிலக்கும் இருந்தது. ஏழை முடவாண்டிகளுக்கும் ஒரு சத்திரம் ஏற்படுத்தி அதற்கு என்று ஒரு இனும் கிராமம் விட்டிருந்தால் வேறு என்ன அறம் செய்திருக்க மாட்டார்கள். மருத்துவச்சாலை, அன்னசாலை, படிப்புச் சாலை, வேதபாடசாலை, ஆகமபாடசாலை, தேவார பாட சாலை முதலான பல அரிய நிலையங்கள் நமது நாட்டில்

இருந்தன. இவைகளுக்கு எல்லாம் நிரம்பச் சொத்துக்கள் உண்டு.

மேற்சொன்ன அறங்களில் யாத்திரா மார்க்கத்தில் வைத்திருந்த அன்ன சத்திரங்களே முக்கியமானவை. தஞ்சை நாட்டில் வடக்கே இருந்து காசிப்பிராமணர்கள், பைராகிகள் முதலியவர்கள் தங்கி உணவு அருந்திவிட்டுச் செல்வதற்காக வழி முழுவதும் சிறிது தூரத்திற்கு ஒன்றாக அனேக சத்திரங்கள் கட்டப்பட்டுள்ளன. கிழக்குக் கடற்கரை யோரமாகப் பெரிய பெரிய சத்திரங்கள் இன்றைக்கும் இருக்கக் காணலாம். இந்த சத்திரா மார்க்கம், இராமேசுவரம் வரைக்கும் செல்லுகின்றது. மற்றொரு சத்திர வரிசை மதுரையிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் வரைக்கும் செல்லுகிறது. இந்தச் சத்திர வரிசை நாயக்கர் வம்சத்தில் ஏற்படுத்தப்பட்டது. ஐந்து கற்களுக்கு ஒவ்வொரு கல் மண்டபம் அந்த வழியில் இருக்கக் காண்கிறோம். இவைகளுக்கு நிலங்கள் இருந்தன. ஆனால் இப்பொழுது என்ன ஆயிற்றோ அறியோம்.

பண்டைக் காலத்து மன்னர்கள் ஏற்படுத்திய அறச்சாலைகளே யன்றித் தற்காலத்திலும் கனதனவான்கள் ஏற்படுத்தியிருக்கிற அன்ன சத்திரங்கள் முதலியவைகள் கணக்கற்று இருக்கின்றன. தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் அறநிலையங்களுக்கு ஏற்படுத்திய பெயர்கள் நிர்வாகத்தைப் பற்றிச் சாசனங்கள் செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள். ஆனால், பண்டைய அறநிலையங்களுக்குக் காகிதச் சாசனங்கள் கிடையா. ஆகவே அப்படிப்பட்ட அறநிலையங்களுக்குப் பாதுகாப்பு இருக்கவேண்டியது அவசியம்தான். எப்படிப்பட்ட பாதுகாப்பு இருக்கவேண்டும் என்பதுதான் கேள்வி ? சமய நிலையங்களைப் பாதுகாப்பதற்காக ஏற்பட்டிருக்கும். அதிகாரக் குழு அந்த வேலையையே சரிவரச் செய்யமுடியவில்லை. அப்படி இருக்க அந்த வேலைக்குச் சமமாக இருக்கும் மற்றொரு கடினமான வேலையை அதே குழுவிற்குக் கொடுத்தால் எவ்வாறு அது வேலை செய்ய முடியும் ?

ஆங்கில நாட்டில் இவ்விரண்டு விதமான நிலையங்களுக்கும் வெவ்வேறு அதிகாரக் குழுக்கள் உண்டு. ஆகவே, அவைகள் செவ்வையாக ஆளப்படுகின்றன. நமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் புதுச்சட்டம் இவ்விரண்டையும் ஒன்று சேர்த்து இருக்கிறது. வேலை கடினமாவதோடு சாத்தியம் ஆவதும் கூடுமா!

3. மாறுதல்: புதுச்சட்டத்தில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கின்றது. அம்மாறுதலைப் பற்றிச் சட்ட விஷயமாக மக்கள் கொண்டிருக்கும் அடிப்படைக் கொள்கையையே அது மாற்றிவிடுகின்றது. இதுவரையில் ஏற்பட்டிருக்கும் அதிகாரத் திட்டப்படி சமய நிலையங்களுக்கும் அரசாங்கத்திற்கும்பொருளைப்பொறுத்தவரையில் யாதொரு சம்பந்தமும் இல்லை. புதுச்சட்டப்படி அவ்வேறுபாடு நீக்கப்பட்டது. மற்ற நாடுகளில் சமய நிலையங்களின் பொருளில் அரசாங்கம் கைவைக்காது. நமது நாட்டிலும் அவ்வாறாகவே இருந்தது. சமய நிலையங்களின் மேற்பார்வை மட்டும் செய்வதற்காக ஒரு பாதுகாப்புக் குழு ஏற்பட்டிருந்தது. அக்குழு சமய நிலையங்களின் பேரில் ஒரு வரியை விதித்து அந்த வரியைக் கொண்டு மேற்பார்வை செய்துவந்தது. அவ்வரிப்பணம் மீதியானாலும் அந்தத் தொகை நிலையங்களுக்குச் சேருமேயன்றி அரசாங்கத்திற்குச் சேராது. இந்தத் தத்துவமுறை எந்த நாட்டிலும் உண்டு. தற்போது அது மாற்றப்பட்டுள்ளது. எப்படி என்று கூறுவோம்.

நாளதுவரை இருந்த பாதுகாப்புக் குழு எடுக்கப்பட்டுப் போய்விட்டது. அதற்கு மாறாக அரசாங்கத்தில் ஒரு தனி இலாகா அல்லது பகுதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அப்பகுதி அரசாங்கமே தவிர வேறு ஒன்றுமல்ல. ஆலயங்களிலிருந்து மீதம் செய்யப்பட்டிருக்கும் 51,27000 ரூபாய் இப்பகுதிக்குக் கொடுக்கப்படும். ஆகவே, இது அரசாங்கத்திற்குச் சேரும். இவ்வாறு சமய நிலையங்களின் பொருள் அரசாங்கத்திற்குச் சேர்வது சரியானதா என்பது கேள்வி? இதனைத் தற்கால நாகரிகம் ஒத்துக்கொள்ளாது.

இதுவரைக்கும் இருந்த அதிகாரக்குழு எடுபட்டுப் போக இனி வேலை செய்யும் இலாக்காவில் அதிகாரம் வகிப்பவர்கள் நான்குவகை அதிகாரிகள் ஆவார்கள். 1. கமிஷனர், 2. டெபுடி கமிஷ்னர்கள், 3. அசிஸ்டெண்டு கமிஷனர்கள், 4. தலத்தொகுதிக் கமிட்டியார். இவர்களிலே முதல் மூன்று பேரும் அரசியல் பணியாளர்கள். நான்காவது பெயர்கள் அரசியலாரால் நியமிக்கப்படும் பொதுமக்கள். கமிஷனர் ஒரே ஒரு அதிகாரி. அவருக்கு முழு அதிகாரமும் உண்டு. டெபுடி கமிஷனர் மூன்று பேர். மூன்று இடங்களில் இருப்பார்கள். அசிஸ்டெண்டு கமிஷனர்கள் 18 பேர்கள்வரை இருப்பார்கள். பொதுவாக ஜில்லாவுக்கு ஒருவர் இருப்பார் என்று தெரிகிறது. தலத்தொகுதிக் கமிட்டியார் மூன்று முதல் ஐந்துபேர் அடங்கிய ஒரு சிறு குழு. இவர்களை அரசாங்கம் நியமிக்கும். இவர்களுக்குத் தேர்தல் முறை இல்லை. முன்னே தேர்தல் முறையில் ஏற்பட்டிருந்த தேவஸ்தானக் கமிட்டிபோல் இவைகள் சங்கடங்களை விளைவிக்காதாம். இதன் அனுபவம் நடைமுறையில்தான் தெரியவரும். இந்த வகையில் அரசாங்க இலாகா ஏற்பட்டு, நமது அறநிலையங்களை எல்லாம் ஆட்சி புரியும். இனி மற்ற அரசியல் ஆட்சி விதிகளைப் பற்றி அடுத்த இதழில் எடுத்துக் கூறுவோம்.

---

2. தலப்பகுதி

# திருக்காளத்தி

1. இடம்: சித்தூர் ஜில்லாவில் ரேணுகுண்டா நிலயத்திலிருந்து கூடூர் செல்லும் இருப்புப் பாதையில் இரண்டாவது நிலயமாக உள்ளது. இருப்புப்பாதை நிலயத்திலிருந்து இரண்டு கல், தென்கிழக்கே சென்று பொன்முகலி யாற்றைத் தாண்டி அக்கரை சென்றால் இந்தத் தலத்தை அடையலாம். ஊர் பெரிய ஊர். அது ஆற்றின் கீழ்ப்புறமாகச் சமநிலத்தில் படர்ந்திருக்கிறது.

ஊருக்குத் தெற்கும், மேற்கும் குன்றுகள் படர்ந்திருக்கின்றன. அக்குன்றுகளில் ஒன்று கண்ணப்ப நாயனர் எழுந்தருளியிருக்கும் குன்று. அக்குன்றுக்கும் ஆற்றிற்கும் இடையில் உள்ளது சிவாலயம். முன்காலத்தில் தமிழ் வழங்கிய தொண்டைநாட்டு ஸ்தலமாக இது இருந்தது. ஆனல் இப்பொழுதோ தெலுங்குமொழி பேசும் பிரதேசமாக மாறிவிட்டது. ஆதி சைவக் குருக்களும் சில குடிகளுமே தமிழ் பேசுகிறவர்கள். மற்றக் குடிகள் எல்லாம் பெரும்பாலும் தெலுங்கு பேசுகிறவர்களே.

2. ஆலயம்: ஆலயம் மிகப் பெரியது. கோபுரங்களுக்கும் ஆலயத்தின் மூக்கியப் பகுதிகளுக்கும் சம்பந்தம் இல்லை. பொன்முகலி ஆற்றிலிருந்து 36 படி ஏறினல் ஆலயத்தின் தளத்தை அடையலாம். இந்த எண்ணிக்கையைப் பார்த்தால் கண்ணப்ப நாயனர் 36 சோபான படிகள் ஏறிக் குடுமித்தேவரைக் கண்ட இடம் இங்குள்ள படிகள் மீதுதானே என்று வியக்க முடியும். படிகள் ஒழுங்காகவும் சிறப்பாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. படிகளின் இரு பக்கங்களிலும் வாராகக் கட்க இலச்சனை செதுக்கப்பட்டிருப்பதால், இப்படிகள் விஜயநகரத்து அரசர்களால் கட்டப்பட்டன என அறியலாம். இனி, தனியே நிற்கும் இரண்டு பெரிய கோபுரங்களும் அதே அரசர்களால் கட்டப்பட்டவை. அவைகளில் ஒன்று ஆற்றை நோக்கியும் மற்றொன்று கிழக்கு நோக்கியும் இருக்கின்றன. இவைகள் கோபுர வாயில்கள் ஆனபடியினல் இவற்றை ஒட்டிப் பெரிய மதில் சுவர்கள் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். ஆனல் இப்பொழுது அவை இல்லை. முன் காலத்தில் கட்டப்பட்டிருந்து பின்னல் அவைகள் அழிந்து விட்டனவோ, அன்றிக் கட்டப்படாமலே நின்றுவிட்டனவோ? கூற இயலாது. கோபுரத்தை ஒட்டி மதில்கள் இருக்கவேண்டிய இடத்தில் வீடுகளும் சத்திரங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. கோயிலுக்குள் ஒரு பிராகாரத்தில் நூற்றுக்கால் மண்டபம் ஒன்று இருக்கின்றது. இதனையும் கோபுரங்களையும் கட்டினவன்

விஜயநகரத்துப் பேரரசனுகிய கிருஷ்ணதேவராயன். கோயிலின் பற்பல பகுதிகளும் பலவேறு காலங்களில் கட்டப்பட்டன. ஆகையால் கோயிலுக்குள் செல்லும் வழி ஒரே நேராக இராமல் திரும்பித்திரும்பிச் செல்லுகின்றது. கோயிலின் உட்பாகங்கள் முழுதும் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் கட்டப்பட்டன. தேவிகோட்டைப் பெரிய மைனர் குடும்பத்தார் இத்திருப் பணிக்கு ரூ. 200,0000 வரை செலவழித்துள்ளார்கள். திருப்பணி வெகு செவ்வையாகச் செய்யப்பட்டுள்ளது.

3. மூர்த்திகள் : மூலஸ்தானத்து சுவாமியின் பெயர் திருக்காளத்தி நாதர். திருத்தொண்டர் புராணத்தின்படி அப்பெயர் குடிமித் தேவர் என்பது. தேவியின் பெயர் : ஞானப்பூங்கோதை. பிள்ளையார் பெயர் : ஐஞ்சந்திவிநாயகர். தலவிருக்ஷம் : கல் ஆல், அகண்ட வில்வம். ஆறு : பொன் முகலி. இது இங்கே வடக்குநோக்கிச் செல்லுகிறது. இதன் வடமொழிப் பெயர் சுவர்ணமுகி. மற்றத் தீர்த்தங்கள் : பிரம்ம தீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம் என்பன.

4. ஐதீகங்கள் : இது பஞ்சபூதத் தலங்களில் ஒன்று. இங்கே இருப்பது வாயுலிங்கம். இதற்குத் தக்ஷிண கைலாயம் என்றும் பெயர். விராட்டு புருஷனது ஆறு ஆதார க்ஷேத்திரங்களுள் விசுத்தி க்ஷேத்திரம். இங்கே சைவமடங்கள் பல உண்டு. இந்த ஸ்தலம் மகாபுராணம், உபபுராணம் ஸ்தலபுராணம் முதலிய எல்லாப் புராணங் களிலும் போற்றப் படுகின்றது. சிலந்தி, காளன் என்ற பாம்பு, யானை இவைகள் பூஜித்தனவாம். சீகாளத்தி என்ற தலப் பெயரில், சீ என்ருல் சிலந்தி, காளம் என்ருல் பாம்பு, அஸ்தி என்ருல் யானை என்று பொருள் கூறுவர். இன்னும் பல தேவர்களும் மற்ருேர்களும் பூஜித்ததாக ஐதீகம் உண்டு. இவைகளை ஸ்தலபுராணங்கள் விரித்துக் கூறும். இந்த ஸ்தலத்தில்தான் கண்ணப்ப நாயனர் முக்தி யடைந்தது. அவருடைய திருவுருவம் கோயிலுக்குள்ளும் அடுத்த மலைமேலும் காணலாம்.

**5. நூல்கள் :** இந்த ஸ்தலத்திற்கு வடமொழி, தெலுங்கு, தமிழ் முதலிய மொழிகளில் புராணங்களும் பிரபந்தங்களும் உண்டு. தமிழ்ப்புராணத்தைச் சிவப்பிரகாச சுவாமிகள் பாடியிருக்கிறார்கள். மற்றொரு புராணம் ஆனந்தக் கூத்தரால் பாடப் பட்டது. தெலுங்கில் பல சதகங்கள் இருக்கின்றன. தேவாரப் பதிகங்கள் நான்கு உண்டு. இளம்பிள்ளைகள் முதன்முதலில் படிக்கும் 'சந்தமார்' என்ற பதிகம் இங்கேதான் அருளப்பட்டது. சங்கராச்சாரியரும், சிவானந்த லகரியும் இந்த ஸ்தலத்துக் கண்ணப்ப நாயனாரைக் குறித்துப் பாடி இருக்கின்றார். பதினொன்றும் திருமுறையிலும் இந்த ஸ்தலம் குறிக்கப்பட்டுள்ளது. நக்கீர தேவர் இந்த ஸ்தலத்தில் தவம் செய்ததாக ஐதீகம் உண்டு. திருமுருகாற்றுப்படை இங்கே அருளிச் செய்ததாக ஒரு வரலாறும் உண்டு.

**6. மற்றைய சிறப்புக்கள் :** இந்தத் தலத்தில் சிவ ராத்திரித் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறும். சதாசிவமூர்த்தி ஐம்முக விநாயகர் முதலிய பல மூர்த்தி களின் ஆலயங்கள் சுற்றிலும் உண்டு. இந்தத் தலத்தில் பல கல்வெட்டுக்கள் இருக்கின்றன. விஜயநகர அரசர் களின் திருப்பணிகள் முற்றும் தமிழ் தெலுங்கு கிரந்த எழுத்துக்களில் இங்குப் பொறிக்கப்பட் டுள்ளன. மற்றும் கண்ணப்ப நாயனாரைப் பற்றி அருமையான வடமொழி சுலோகங்கள் இங்கே வெட்டப்பட் டுள்ளன. மற்ற விவ ரங்களை C. K. S. திருத்தொண்டர் புராணத்தில் காண்க.

---

## 3. சமயப்பகுதி

# காதலாகி வாழ்க!

(அ. நா. ப. திருஞானசம்பந்தன்)

ஈதென்ன தலைப்பு! இஃதும் சித்தாந்தத்தில் இடம் பெறுகிறதே என்கிற ஐயம் தலைப்பைக் கண்ணுறும் ஒவ் வொருவர் மனத்திலும் தோன்றியே தீரும். காதல்

வளரத்தான், இன்று நந்தமிழ் நாட்டிலே தோன்றியுள்ள இதழ்கள் சொல்லவும் முடியவில்லையே என்ற எண்ணந் தோன்றும். நிற்க. ஒத்த குணமும், ஒத்த நலனும், ஒத்த பண்பும் உள்ள அவனும் பதினுறுட்டைப் பிராயத்தனுய், அவளும் பன்னீராட்டைப் பிராயத்தளாய் உள்ள ஒருவனும் – ஒருத்தியும் வாழ்வதைப் பற்றியோ, அன்றி நிர்மலமான ஆகாயத்தில், வெள்ளிக்கட்டி இப்பொழுதோ, அன்றிச் சற்று முன்புதான் உருக்கி வார்க்கப் பட்டதோ என்று ஐயுறும்படித் திங்கள் தன் தண்ணிய ஒளியைப் பாப்பிக் கொண்டிருக்கும் வேளையில் "அவனும் – அவளும்" துய்க்க இருக்கும் இன்பத்தைப் பற்றியோ சுட்டிக் காட்டி, விளக்கி வைக்க எழுந்த தலைப்பு அல்ல இது ! பின் என்ன ? அருட் காதலின் அளவை அறுதியிட இயலாது; அதன் ஆழம் அளவிடற் கரியது. ஆழ்ந்த சிந்தனை நோக்கோடு அதில் படிந்தோர்க்கு அதன் உண்மை புலனுகித் தீரும் என்பதையே, மேற்கண்ட தலைப்பு இனி நமக்கு எடுத்து விளக்கப் போகிறது.

காதல் இரண்டு வகையாகக் கொள்ளலாம். அவை ஆசைக் காதல், அருட்காதல் என்பன. இவற்றுள் எது சிறந்தது ? இரண்டுமா ? ஓரளவிற்கு இரண்டும் சிறந்தன. அப்படி யென்றுல் அருட்காதல் மிகவும் சிறந்ததென்பதின் உண்மை என்ன ? என்ற வினு எழுமல்லவா ? ஆம் ! முன்னையது, கால எல்லைக்கும், மன எல்லைக்கும் மற்றும் எல்லாவற்றிற்கும் உட்பட்டது. இதனை எண்ணிய மாத்திரத்தில் பெறுதல் இயலும். உடனே பயனையும் நுகாலாம். எல்லை மீறினுல் அதனுல் வரும் கேடு இவ்வளவு, அவ்வளவுதான் என்று சொல்ல முடியாது. அனுபவத்தில் கண்டவர் நன்கறிவர். பின்னைய காதல் காலத்தையும், மனத்தையும், எண்ணங்களையும், பிறவற்றையுங் கடந்தது. ஆசைக்காதல் தோன்றுங்கால் இன்பமாய், முடியுங்கால் இடும்பாய் நிற்கும். அருட்காதல் தோன்றுங்கால், நுனியிலிருந்து அடிக்குக் கரும்பைத் தின்பதுபோல, தொடங்குங்கால் சற்று இன்பமாய் இடையில் பேரின்பமாய், முடிவில்

பெரும் பேரின்பமாய் நின்று நிலவும். இதனை ஓர் உதாரணத்தால் அறிவோம்.

காலைக் கதிரோன் தோன்றுங்கால் மனதிற்கு எவ்வளவு இன்பம் அளிக்கிறான். பார்க்கப் பார்க்க எவ்வளவு மகிழ்ச்சி நம் மனத்தில் பொங்கித் ததும்பி ஓடுகிறது. அஃதேபோல் மாலையில் மேற்றிசையில் மெல்லச் சென்று விழும் கதிரோனை நோக்குங்கள்! ஓரே சிவந்த வானத்தின் இடையில் தோன்றி விழும் காட்சியை என்னென்பது! மெஸ்மெரிஸம் பயிலும் அன்பர்களும், அன்றி நெடுநாட்கள் வரையில் பயனற்ற மூக்குக் கண்ணாடிகளை இட்டுக் கொள்ளாது, உடல் உரம் பெற்று வாழ எண்ணும் அன்பர்கள் காலைக் கதிரொளியும், மாலைக் கதிரொளியும் வேண்டியே நிற்பர். ஆனால் அதே கதிரவனையும், அவன் காய்ந்து தள்ளும் நண்பகல் வெயிலையும் விரும்புகிறவர்கள் நாட்டில் உண்டா? இல்லையே! எந்த வாயால் இசை மொழிந்து பண்ணமைத்தார்களோ கதிரோனுக்கு, அவ்வாயால் வசை மொழிவதையுங் காணுகிறோ மல்லவா? கதிரவன் ஒருவனே எவ்வளவு நேரம் பணியாற்றுவ தென்றெண்ணி வேறொரு கதிரோன் அவ்விடத்தை ஈடுசெய்ய (Substitute) வருகிறானா என்ன? அல்லவே! பின் என்ன? கதிரவன் ஒருவன், ஒருவனே! இருப்பினும் சமயத்திற் கேற்றாற்போல் தன்மையில் திரிந்தே காண்கிறான். அஃதேபோல்தான் காதலும்! அன்புக் காதல் ஆசைக்காதலாக ஆகி மீறிய காமமாக மாறும் பொழுது நம்மை மாய்க்கிறது. அதுபோழ்து நண்பகல் கதிரவன் நிலையே ஏற்படுகிறது. அன்புக் காதலே அருட்காதலாக மாறும்பொழுது, “ஆசையறுமின்கள், ஆசையறுமின்கள், ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்’’ என்ற திருமூலர் வாக்கைக் கடைபிடிக்கச் செய்து, பேரானந்தத்தை நல்குகிறது. எதுபோல எனின் காலைக் கதிரொளியும், மாலைக் கதிரொளியும் இன்பம் பயப்பதுபோல! இக் காலப் போக்கில் மக்கள் மனமானது, அருட்காதலை மருட்காதல்

எனவே அழைத்துச் செல்கிறது. ஆனால் ஆசைக் காதலைத் தான் ஆளவந்த அரசருள் ஏறு எனப்படுகிறது.

கொடிய நஞ்சைக் கக்கி, உயிரை வதைத்து மாய்க்குந் தன்மை வாய்ந்த பாம்பிற்கு என்ன பெயர் தெரியுமா? நல்லப்பாம்பு! இத்தகையதுதான் ஆசைக் காதல். ஆனால் அதே நல்லப்பாம்பு பிடாரனுடைய பிடியில் அகப்பட்டு, அதனை ஒடுக்கப்பட்ட நிலையில் உள்ளக்கால், படமெடுத்து ஆடினால் நாம் ரசித்து மகிழ்வடைகிறோம். இதனை யொத்ததுதான் அருட்காதல்! தன்னிச்சையாக வாழும் பாம்பிடம் தானே சென்று, படமெடுக்கச் சொல்லி ஆட வைத்து மகிழ நேர்தல் இயலாதல்லவா? ஒருவேளை அது படமெடுத்தால் வெகுதூரத்தில் இருந்து காணலாம்! நெருங்கினால் நம்நிலை என்ன ஆகுமோ என்றஞ்சுவதுபோல இருப்பது ஆசைக்காதல்; பாம்பாட்டியின் கையில் அப் பாம்பு இருப்பின், நாமும் அருகாமையில் அமர்ந்து இன்ப மாகப் படையும் நடுங்கும் படத்தைக் கண்டு மகிழ்வடை கிறோம். இஃதே போல்வது அருட்காதல்! பிடாரனாகிய இறைவனிடம், பாம்பின் விஷத்தை யொத்த நம்பால் விளைந்து கிடக்கும் தீக்குணங்களைப் போக்கி, இறைவன், படமெடுத்து நன்நிலையில் ஆடும் பாம்பை யொத்து, நம்மை வாழச் செய்கிறான், ஆடச் செய்கிறான் என்பதே உண்மை. அருட்காதல் பெறுங்கால், பாம்பை யொத்து நம்மை ஆட்டுகிறான்; நாமும் ஆடுகிறோம்; அதனைக் கண்டு அவனும் இன்பம் அடைகிறான். இதுவே அவன் அடையும் பேரானந்தம். அவன் பேரானந்தம் அடையின் அதன் வழியாக நாமும் அதனை அடைந்தே தீருவோம்.

பேரானந்தம் அடைய இறைவனிடம் தொடர்பு கொள்ள வேண்டும்! எந்த நிலையில் கொள்வது? தந்தை யும் தனயனும்போல் கொள்ளலாமா? மாமனும் மைத் துனனுமாக உறவு கொள்ளலாமா? கொள்ளலாகாது! கொண்டாலும் எளிதில் பயன்பெறுதல் கூடாதொழியும். தாயும் - சேயுமாகத் தொடர்பு கொள்ளலாமா? கொள்ள லாம்! இருந்தாலும் வேறொரு நெருங்கிய தொடர்பு

உள்ளது. அதனைக் கொண்டால் நாம் எண்ணியதை உடனே அடையலாம். அது என்ன ? அதுதான் நாயகனாக இறைவனைக் கொண்டு, நம்மை நாயகிகளாக ஆக்கிக் கொள்ள வேண்டும். இது என்ன வியப்பாய் உள்ளதே! இங்ஙனம் ஆகுதலும் இயலுமோ ? என்றெண்ணலாம். ஆடையில் மாற்றங் கண்டு கொள்வதல்ல! பின்னர், அறிவால் தொடர்பு கொண்டு காதலை வளர்க்க வேண்டும். அக் காதலை அறிவால் மட்டும் வளர்க்க முடியுமா ? சிறிது கூடும். அதைக் காட்டிலும், காதலனை மயக்கக் காதலி இசையைப் பயன் படுத்துவதுபோல, இறைவனும் சிவபெருமானை, தன்மை வாய்ந்த பண்ணமைந்த தேவார திருவாசகப் பாடல்கள் ஓதி அதன்மூலம் அவன் நம்மிடம் காதல் கொள்ளச் செய்யவேண்டும். அக் காதல் முதலில் அரும்பி நாளடைவில் அருட் காதலாக அமையும். மாணிக்கவாசகர் பெருமானும் தன்னை நாயகி என மறைமுகமாக் கொண்டு, "நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனே" என்று நாயகனுக்குப் பெருமைகொடுத்துப் பேசுவதைநோக்கி அகமகிழ்மின்!

நாயகி நிலையில் (பாவத்தில்) நாம் நின்று, காதல் வளர்க்க வேண்டியது பற்றி ஞானசம்பந்தர் பெருமான் வாயிலாகக் கண்டு அல்லவோ இன்புறவேண்டும்?

அன்பு முதிர்ந்து, மனம் நெகிழ்ந்து, கண்களில் நீர் நிறைந்து, ஓதுகின்றவர்களை முத்திச் செந்நெறிக்குச் செலுத்துவதும், நான்காகிய வேதங்களுள்ளும் உண்மைப் பொருளாய் இருப்பது திருநாம மந்திரமாகிய "நமச்சிவாய" வென்னுந் திருவைந் தெழுத்துமேயாம்.

காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாமம் நமச்சி வாயவே.

இது என்ன ? காதலில் உருக்கம் பிறந்து, அதில் அழுகையா தோன்றவேண்டும் ? அவ்வழுகையில் கண்ணீர்

மல்கவேண்டும்? இதுவும் ஒரு காதலா என்ற கேள்வி அல்லவா எழும். ஆம்! "மூத்தோர் சொல்லும், முது நெல்லிக் கனியும் முன்னே புளிப்பு, பின்னே இனிப்பு" என்ற பழமொழியை நாம் அறிந்திருக்கிறோ மல்லவா? அதனையொத்தே காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நமசிவாய என்றோதுவது மூத்தோர் சொற்கள் முதலில் கூறும்பொழுது துன்பம் விளைவிப்பது போலவும், நெல்லிக் கனியை முதலில் உண்ணுங்கால் புளிப்பாயும், ஒருவிதத் துவர்ப்பாயும் இருப்பதொத்திருக்கும். நெல்லிக் கனியுண்டு, அதன்மேல் கொஞ்சம் நீர் பருகினல் என்னுகிறது? இனிப்பு அல்லவா தட்டுகிறது. அதனை யொத்ததே முதியோர் சொற்கள்! நெல்லி, தண்ணீர் உண்டபின் நல்கும் இனிப்பின் நீர்மையதே நன்னெறியாகும். இது தானே ஏனைய பெருமக்களும் வேண்டி நிற்குந் திருநெறி யாகும்? அருட்காதல் வளர்வதற்கு உருக்கம், அழுகை, கண்ணீர் இவை எல்லாம் மிகமிக அவசியம்தான். இத் தகையவைகளெல்லாம் வேண்டும் என்று, ஆசைக்காதல் கொள்பவர்கள் வேண்டுவார்களா என்ன? வேண்டவே மாட்டார்களே! இவ்வினத்தில்தான் காதல் என்ற பாதை ஆசைக் காதலுக்கும்,அருட்காதலுக்கும் ஒன்றுய்ச் சென்று கொண்டிருந்ததும், வேறு பிரிகின்றது. திருவாதவூரடிகள் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்குகிற நிலையைக் கண்டு இன்புறுவோம்!

"உள்ளந்தா ணின்றுச்சி யளவு நெஞ்சா
யுருகாதா லுடம்பெல்லாங் கண்ணா யண்ணா
வெள்ளந்தான் பாயாத னெஞ்சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே"

கரைந்து கரைந்துருகிக் கண்ணீ ராருக
விரைந்தே நிருவிகற்ப மெய்த - நிரந்தரமும்
நின்னையே சிந்திக்கநீ கொடுத்தாய் மோனுநான்
என்னைமுழு துங்கொடுத்தே னே.

(உடல் பொய்யுறவு - தாயுமானர்)

## ஆசைக்காதல் – அருட்காதல்

கள்ளையுண்டு, கவன மிழந்து கடுகிடந்து கீழே விழும் குடிகாரனை ஒத்தது ஆசைக்காதல்; அமுதை உண்டு, அற வாழ்வு வாழ்ந்து, இறைபணி இயற்றி இன்பங் காண்டலைப் போல்வது அருட்காதல்; உள்ளபொருளை அடக்கி வைத்துக் கொண்டு, தானும் உண்ணாது "நாய் கண்ட தெங்கங் கனியென்ன" வாழும் வாழ்வை ஒத்தது ஆசைக்காதல்; "ஈதல் இசைபட வாழ்தல்" என்பதறிந்து ஈந்து இன்பங்கண்டு அன்புக் கடலில் மூழ்குவதையொத்தது அருட்காதல். நாவைக்காவாது, வாயில் வந்தவைகளெல்லாம் பேசி, அதனால் பெறும் துன்பத்தையொத்தது ஆசைக்காதல்; நாவை அடக்கி, வார்த்தைகளை எடை போட்டுப், பயனுள்ள சொற்களை இயம்பி அடையும் நற் பெயரை யொத்தது அருட்காதல். என்னே அருட்காதலின் மகிமை!

ஆசைக் காதலானது, மின்மினிப் பூச்சியின் ஒளியைப் போல் தோன்றித் தோன்றி மறைந்து இன்பங் கொடுத்தற் போன்றும், பித்தமேறியவன் எண்ணங்கள் நிலையாக நில்லாது மாறிச் செல்வதைப் போன்றும், பௌர்ணமியன்று கடல் சொல்ல முடியா ஆர்ப்பாட்டங்களை அமர்க்கள வீரனைப் போல் செய்து, மறுநாள் அவ் வாரவாரம் ஒடுங்குவதை ஒத்ததாகும்.

அருட் காதலானது, அரசியல் எத்தகைய மாற்ற முறினும், சூழ்ச்சிகள் சூழினும், அருள் அகலினும், மகிழ்ச்சி மல்கினும், ஆணவம் அண்டினும், அன்பு அழியினும், மனது மங்கினும், மாண்பு மாண்டிடினும், திங்களும், பரிதியும் என்றும் நிலவி நின்று உலக மக்களை உய்விப்பதை ஒத்ததாகும்.

ஆசைக் காதலா? அன்றி அருட் காதலா? எது சிறந்தது என ஆய்ந்து முடிவு கட்டுங்கள்.

---

5. சாத்திரப்பகுதி

# சிவப்பிரகாச மூலமும் உரையும்

(சித்தாந்த ரத்நாகரம் - முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், ஆரணி)

(மலர் 24 ; இதழ் 9 ; பக்கம் 385-ன் தொடர்ச்சி)

இதுவுமது. இது கருவித்துணையின்றி யறிய மாட்டாத வுயிர் சித்தோ சடமோ என்னும் ஐயம் நீக்குதலுணர்த்துவது ;—

(நுச) அறிவேனில் வாயில் வேண்டா
வன்றேனி லவைதா மென்னை
யறிவவை யுதவு மென்னி
லசேதன மவைதா மெல்லா
மறிபவ னறியுந் தன்மை
யருளுவ னேன்னி லான்மா
வறிவில தாகு மீச
னசேதனத் தளித்தி டானே.

என்பது. பசு சித்தாயின், வினைபெருக்கவும் நுகரவும் வாயிலாகிய கருவி காணங்களைப் பொருந்தியறிய வேண்டா. சடமாயின், அக்கருவி கரணங்கள் வந்து பொருந்தின தெதற்கு ? அவை அறிவை உதவும் என்றால், அவை சடமாதலின் எவ்வாறு அறிவிக்கவல்லன ? சர்வஞ்ஞனாகிய பதியே பசுவிற்குத் தவச் சடமாகிய (பாசக்) கருவி கரணங்கட்குச் சித்தாந் தன்மையை அருள்வான் என்றால், பசு சடமென்றாகும். பசுவும் பாசமும் சடமுமாகில், சடமாய பாசத்திற்குச் சித்தாந் தன்மையைக் கொடுத்துப் பசுவிற்குணர்த்தவேண்டுவதில்லை. நேரே பசுவிற்கேயுணர்த்தலாமே! அசேதனத்தைச் சேதனமாக்கி அது கருவியாக மற்றொன்றைச் சேதனமாக்குதல் ஈசன் செயலாகாது என்பதாம்.

பதிபசுபாசம் என்னும் முப்பொருள்களுள், பசு சித்தாயின் பாசத்துணை எற்றுக்கு ? பசு சடமாயின் பாசத்

தாற் பயனென்ன? பாசம் பசுவுக்குச் சித்தாமியல்பை உதவுமெனில், சடமாயபாசம் பசுவுக்குச் சித்தினை உதவுதல் எங்ஙனம்? பதியே அதை அருள்வான் என்னில், பாசம் மிகையன்றோ? பசு சடமாகாதோ? பாசமும் சடம் பசுவும் சடம் என்றால் ஒருசடத்தின் வாயிலாக மற்றொரு சடத்திற்கு அறிவை அளித்தல் வேண்டா. அவ்வாறு அளித்தால் பெறற்குரிய சடத்திற்கு நேரே அளிக்கும் ஆற்றல் ஈசனுக்கு இல்லை என்றாகும். அவ்வாற்றலில்லாதவன் ஈசனல்லன். அவனது வரம்பிலாற்றலுடைமைக்கு மாறாகும்.

பசுவைப்பற்றிய பாசத்தைப்போக்க, அப்பசுவுக்கு முன்புள்ள அறிவை அக்கருவிகரணங்களைக் கூட்டி விளக்கஞ் செய்தலே பதியின் உபகாரமாம். ஆதலின், பசு சடமன்று, சித்தே என்பது வற்புறுத்தப்பட்டது.

சங்கற்ப நிராகரணத்துள்ள ஈசுரவிகாரவாதி சங்கற்பத்தையும் நிராகரணத்தையும் ஈண்டுணர்தல் வேண்டும்.

“ பஃறுளைக் கடத்தின் உள்விளக் கேய்ப்ப
அறிவுள வாகும் உருவுளும் உயிர்கள் ”

“ இருந்ததன் கேள்வி திருந்திடும் உயிர்கள்
அறிவின வாயிற் பொறிபுலன் என்னை
மற்றவை பற்றி உற்றறிந் திடுதலின்
அறிவென வழங்கும் உயிரென வுரைத்தல்
காணுங் கண்ணினன் கைகொடு தடவிப்
பூணும் பொருளின் பெயர்பல புகறல்
என்னுங் கிளவி தன்னொடு தகுமே ”

அறிவதை யுதவுமென்ற பாடமுமுண்டு. அவை என முன்னர்ச் சுட்டிப் பின்னர் ஒருமையாக் கூறுரென்க. அவை என்பது எழுவாய். அறிவை செயப்படுபொருள். அதனும் அப்பாடம் பொருந்தாது. அறிவை என்னற்கு அறிவதை என்றுரொனலும் சிறவாது. வினைப்பெயராக் கோடலும் ஒல்லாது.

பசுபோதத்தியல்பும் அதனல் சிவனை அறிவதற்கருமையும், அறியப்படும்பொருள் அசத்தாதலும் கூறுவது:—

(ருரு) அறிவினு லறிந்த யாவு
மசத்தாத லறிதி யென்று
மறிவினு லறியோ ணுதே
லாவதேன் றின்மை தோன்மை
யறிவுதா னென்றை முந்தி
யதுவது வாகக் காணு
மறிவுகா ணசத்து மற்ற
தறிவினுக் கறியோ ணுதே.

என்பது. சுட்டறிவா லறியப்பட்டனவெல்லாம் அசத்தாதலே அறிவாய். எஞ்ஞான்றும் சுட்டறிவாலறியப் பொருந்தாதாயின், அப்பொருந்தாப் பொருளால் அச்சுட்டும் பொருட்குப் பயனுவதொன்றுமின்று. அச்சுட்டறிவு அநாதியாகவே ஒன்றனை முற்பட்டுச் சார்ந்ததன்வண்ணமாக அறியும் அறிவு. அதனுற் காணப்படுவன அசத்தேயாம். மற்றைச் சத்தாகிய பதி அதனுலறியப் பொருந்தாது என்பதாம்.

இங்கு அறிவு என்றது சுட்டியறிவதாகிய பசுவறிவை. ‘ உலகத்துள்ளாரறியும் அளவையறிவு ’ என்ருர் சிவஞான பாடியகாரர். ‘ அறிவினுலறிந்த யாவு மசத்தாத லறிதி’ என்றதனையே ‘ தொன்மை யறிவுதான் ஒன்றை முந்தியதுவது வாகக் காணுமறிவு காணசத்து’ என மீளத் தெரித்துணர்த்தினுரென்ருர் அவர். தொன்மை – அநாதி.

இல்லை என்னும் உணர்விற்கு விடயமாய அநுபலத்தியைப் பயப்பிப்பது மாத்திரையன்றே அசத்தாவது. அவ்வாறன்றி “ இது குடம் ” “ இஃது ஆடை ” என்ருற்போல உள்ளதென்னும் உணர்விற்கு விடயமாய் உபலத்தியைப் பயப்பிக்கும் பிரபஞ்சமும் அசத்தேயாயின், சத்து அசத்து என்னும் பாகுபாடே பெறப்படாமையின் உணரப்படும் விடயமாதல் மாத்திரையே பற்றி அறிபொருள் அசத்து என்றல் சாலாது என்பது நையாயிகர் முதலியோர் மதம்.

இல்லை என்னும் உணர்விற்கு விடயமாய் அநுபலத்தியைப் பயப்பிக்கும் அதுவே அசத்தினியல்பாவதெனின்,

அங்ஙனம் அநுபலத்தியைப் பயப்பிப்பது முன் உண்டென்னும் உணர்விற்கு விடயமாய் உபலத்தியைப் பயப்பிக்கும் இராசதகுண மிகுதிப் பாட்டினின்ற பொருளேயன்றிப் பிறிதன்று. அதனால், பாவம்போல சுபாவமும் பாவப் பொருளின் தன்மை யெய்துதற்குக் காரணம் பொருட் பெற்றியாகிய தாமத குணமிகுதிப்பாடே என்பது பெறப் படும். படலால், பொருட்பெற்றியின் வேறாய் சுபாவம் என ஒன்றில்லை. இன்மையான், அறிவினாலறியப்பட்ட சுட்டு அசத்தே என்றற்கிழுக்கில்லை. உபலத்திக்கு விடயமானவை யெல்லாம் அநுபலத்திக்கு விடயமாதல் ஒருதலை.

அவனென்றும் அவளென்றும் அதுவென்றும் இவ்வாறு சுட்டியறியப் படுவனவெல்லாம் தோன்றி நின்றழியும் என்பதே சித்தாந்த முடிபு. ஒருவன் ஒருத்தி ஒன்று என்றவிற் சுட்டும் எண்ணும் கூடியிருத்தலறிக. "ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம்" "ஏகமென்று சுட்டுவதுண்மையின்' என்னுஞ் சிவஞானபோத வசனமும் ஒருமையை யுணர்த்தும்போது சுட்டுவிரலாட்சி யுண்மையும் நோக்கி யுணர்க. இவ்வுண்மை யுணராது, முதனூற்கும் வழிநூற்கும் வேறுபாடு கூறி மகிழும் அறிவருமுளர். 'ஏகமென்று சுட்டுவ துண்மையின்' என்ற முதனூற் பகுதியையும் 'ஒன்றெனு மதனாலொன் றென்றுரைப்ப துண்டாகையாலே' என்ற வழிநூற்பகுதியையும் ஒத்திட்டுணரின், அத்தகைய சுட்டுச் சொல்லாலன்றி வேறாற்றான் உணர்த்தமுடியாமை நன்குவிளங்கும்.

அசத்து :—ஒருதன்மைத்தாய் நில்லாமல், காரியா வித்தையில் தூலமாய் விளங்கி நின்ற பிரபஞ்சம் காரணா வித்தையில் சூக்குமமாகிய சத்திவடிவாய் விளங்காது நிற்பது. சைவசித்தாந்தத்திற் சத்தின் வேறாய் அசத்து என்பது ஒன்றில்லை. பிரபஞ்சமும் சத்தியப் பொருளே என்க. தோன்றி விரைந்து மறைவனவாகிய நீர்மேல் எழுத்து, கனா, பேய்த் தேர் என்பவற்றை அசத்தென்றல் போலிப் பிரபஞ்சத்தையும் 'உண்டுபோலின்றாம் பண்பில்' அசத்தென்பர், உண்டுபோலின்றாதல் இவ்வளவு காலத்தில்

நசிக்கு மென்றறியவாராது நெடுங்காலம் நிலைபெறுவன போலத் தோன்றிக் காலம்வரின் அப்பொழுதே விரைவில் மறைந்தொழிதல். 'நெருந லுளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை யுடைத்திவ் வுலகு' என்றதும் இது பற்றியே. 'அறிவினா லறிந்த யாவும் அசத்து' என்றதால் சிவஞானத்தாலறிந்தது சத்து என்பது பெற்றாம். ஆகவே, என்றும் ஓரியல்பாய் நிற்பதாகிய பதிப்பொருள் அறிவினா லறியப்படுவதன்று என்க. அது 'ஞானச் செய்தியாற் சிந்தையுள்ளே மருளெலாம் நீங்கக்கண்டு வாழ' நிற்பது. அதை மெய்கண்டனால், 'ஒன்றலாவொன்று' 'ஒன்றலாவீறு' என்று சுட்டுக் கடங்காதபதியைச் சுட்டிக்காட்டுகின்றது.

இருபொருளும் சித்தேயாயினும் அவற்றிற்கு அந்தரங்க வேற்றுமை பெரிது. கண்ணொளியும் ஞாயிற்றினொளியும் பொதுமையால் ஒத்து ஒன்றுமாயினும் கண்ணொளி வியஞ்சகத்தை யின்றி யமையாது அதுவதுவாய் முந்திக் காண்பது ஞாயிற்றினொளி. வியஞ்சகம் வேண்டாதுதானே வியஞ்சகமாவது. எல்லாவற்றையும் ஒருங்கே விளக்கி நிற்பது. அத்தகைய வேறுபாடு பசுபதி என்னும் இரு வேறு சித்துக்கண்ணும் உணர்க.

'மற்றதறிவினுக் கறியொணாதே' என்றதைச் சிவ ஞானசித்தியாருள் வரும்,

'அன்னிய மிலாமை யானும் அறிவினுள் நிற்ற லானும்
உன்னிய எல்லாம் உண்ணின் றுணர்த்துவ னாத லானும்
என்னது யானென் றோதும் இருஞ்செருக் கறுத்த லானும்
தன்னறி வதனாற் காணுந் தகைமையன் அல்லன் ஈசன்'

என்றதாலும், 'அனைத்துலகு மாயநின்னை ஐம்புலன்கள் காண்கிலா' என்ற திருவாசகத்தாலும், 'நிறைந்தெங்கும் நீயேயாய் நின்றாலும் ஒன்றின் மறைந்தம் புலன்காண வாராய்' என்ற கயிலைபாதி காளத்திபாதியந்தாதியாலும், "கரையில் அன்பு என்பினையுருக்கப், பூண்ட ஐம்புலனில் புலப்படா இன்பம் புணர்ந்து மெய்யுணர்வினில் பொங்கத் தாண்டவம் புரியுந்தம்பிரானார்" (ஏயர்கோனாயனார். ௬0) என்னும் பெரியபுராணத்தாலும் அறிக.

'மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைத்து அமுதேயூறி நின்று என்னுள்ளெழுபரஞ் சோதி' என்றவாறு, புலனெறி நீத்து அருள்வழி போய்ப் பெறும் பேரின்பமெய்ப்பொருள் புலன்களுக்குப் புலப்பட லொல்லாது.

சிவஞானபாடியம் சூ. க. சூ. உரைகளிலுள்ளவற்றையு மறிக.

## அசத்தை யறிவதுபற்றிய ஆராய்ச்சி

(ருசு) எவ்வழி வசத்த றிந்த
தேனிலுயி ரறியா தீச
னவ்வழி வறியா னல்ல
தசேதன மறியா தாவி
செவ்விய கருவி கூடித்
தெரிவுறு தருளிற் சேரா
துவ்விரு வகைய தேன்னி
லொளியிரு ளொருங்கு றுவே.

என்பது. பதிபசுபாசம் என்னும் முப்பொருளுள் அசத் தாம் பாசத்தை அறிந்தது எது? தனித்தனியாக ஆராயின் பசு சுதந்திரனல்லனாதலின் தானேயறியமாட்டாது. பதி அப்பசுஞானம்போற் சுட்டியறிவானல்லன். பாசம் சட மாதலின் அறிதலில்லை. இணையிணையாக ஆராயின், பசுவும் பாசமுங் கூடியறிதலுமில்லை. (என்னை? பசு, தானாக அறிய மாட்டாது. பாசம் சடம். தானேயறியவல்லாத பசுவும் அறிதலே யில்லாத பசுவும் கூடியறிவுறாமையின்.) பதியும் பசுவுங் கூடியறிதலு மில்லை. (பெத்த நிலையில், பதியுடன் பசு சேர மாட்டாது). பதியும் பாசமும் கூடியறிதலுமில்லை. பதியாகிய ஒளியும் பாசமாகிய இருளும் ஒருசேரக்கூடி நில்லாமையான் என்பது.

முப்பொருளும் தனித்தனியாக 'மூன்றும் இணையிணை யாக மூன்றும் ஆதலின் அவ்வாறு நிலையாலும் அசத்தை யறிவது யாது என்று ஆராய்ந்து, முடிவாகச் சதசத்தாகிய உயிரே அசத்தையறியும். இயல்பினது என்றுணர்த்திற்று.

இதன்பொருளை யுணருமாறு வினவும் விடையுமாக எழுதுதல் நன்று.

1. வின :—அசத்தையறிந்தது சதசத்தா சத்தா ?
   விடை :—தனக்கென அறிவிலாத சதசத்தும் அறியாது. சுட்டியறியாத சத்தும் அறியாது.

2. வின :—அசத்து, தன்னையும் ஏனையிரண்டனையும் அறியுமோ ?
   விடை :—அசத்து சடமாதலின் அறியமாட்டாது.

3. வின :—அச்சதசத்து அசத்தொடு கூடியறியுமோ ?
   விடை :—அவ்விரண்டுங் கூடித் தெரிதல் எய்தாது. (சுதந்திரமில்லாச் சித்தும் சடமான அசித்தும் கூடித்தெரிதல் இல்லை.)

4. அச்சதசத்தும் சத்தும்கூடித் தெரியாவோ ? பெத்தத்திற் சதசத்து அருளாகிய சத்தொடு கூடாது. கூடினன்றோ தெரிவதுபற்றிய ஆராய்ச்சி நிகழும் !

5. சத்தும் அசத்துங்கூடித் தெரியாவோ ? அருளொளியும் மருளிருளும் ஒருங்கு நில்லா. சத்து, சதசத்து, அசத்து என்னும் முப்பொருளுள்ளே அசத்தை அறிந்தது எவ்வறிவு என்னும் ஆராய்ச்சிக்கண் வரும் ஐயம் (1) சத்தோ ? (2) அசத்தோ ? (3) சதசத்தோ ? (4) சதசத்தும் அசத்துமோ ? (5) சதசத்தும் சத்துமோ ? (6) சத்தும் அசத்துமோ? என்னும் ஆறுமேயாம். ஆதலின், அவ்வாறு வினவிற்கும் விடையாக இத்திருவிருத்தத்துள்,

1. ஈசன் அவ்வறிவறியான்.
2. அல்லது சுசேதனம் அறியாது.
3. உயிர் அறியாது.
4. ஆவி (செவ்விய) கருவிகூடித் தெரிவு உறாது.
5. அருளிற் சேராது.
6. ஒளியிருளொருங்குறா என்ன நின்றன.

இதி லசத்தையறியுமாராய்ச்சி யுள்ளதுபோல், அடுத்ததில், சத்தையறியுமாராய்ச்சியுள்ளவாறுணர்க. (தொடரும்)

5. கலைப்பகுதி

# சும்மா இரு

ம. ரா.

சென்றமுறை யாழ்ப்பாணத்திற்குச் சென்றபொழுது கலாநிலயத்தில் நானும் எனது நண்பர்களும் தங்கி இருந்தோம். அங்கே ஒரு ஜெர்மானியத் துறவியைச் சந்தித்தோம். அவர் காவி யணிந்திருந்தார். வெறுங் காலில் நடக்கப்பழகி இருந்தார். நமது சமயத்தில் நம்பிக்கை கொண்டு தூய்மையான உணவை மட்டும் உண்டு வந்தார். தமிழை ஒரு சிறிது கற்றுக்கொண்டிருந்தார். தமிழை நன்ருகக் கற்று அதிலுள்ள உண்மைகளை ஆராய வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு மிகவும் உண்டு. 'சும்மா இரு' என்பதன் உட்பொருளை ஆராயவேண்டும் என்பது அவருடைய பெரிய அவா. ஒன்றிரண்டு மேற்கோள்களை எழுதிவைத்துக் கொண்டிருந்தார். மற்றும் வேறு மேற்கோள்கள் கிடைக்குமோ என்று கேட்டார். நான் அருணகிரிநாதர், தாயுமானவர், சிதம்பரசுவாமிகள் நூல்களிலிருந்து சிலமேற் கோள்களைக் கூறினேன். இத்தனை மேற்கோள்கள் உண்டா என்று வினவிவிட்டு அவைகளை எழுதித்தரச் சொன்ஞர். என்னிடம் "முருகவேள் பனுவற்றிரட்டு" என்ற திரட்டு நூல் ஒன்று இருந்தது. அதிலிருந்து மேற்கோள்களைப் படித்துக் காட்டிப் பொருளும் உரைத்தேன். மிகுந்த மகிழ்ச்சியோடு கேட்டுவிட்டு அவைகளை எழுதித்தரச் சொன்ஞர். எழுதித் தந்தேன். அவைகளைத் தன் கையேட்டில் பெரிய எழுத்துக்களால் பதித்துக்கொண்டு அவைகளுக்குக் கீழ் ஆங்கில லிபியில் அவைகளை எழுதிக்கொண்டார். 'இந்த மேற்கோள்களின் மேல் ஏன் இத்தனை ஆர்வம்' என்று கேட்டேன். அதற்கு ஒரு கதை கேட்டதாகச் சொல்லி அக்கதையை எங்களிடம் சொன்ஞர்.

ஆங்கிலேயர்கள் வந்த தொடக்கத்திலே தமிழ்நாட்டில் பலமடங்களும் சத்திரங்களும் இருக்கக்கண்டார்கள்.

அவர்களின் பராமரிப்புக்கு முற்காலத்திய அரசர்கள் தான தருமங்கள் செய்திருந்தார்கள். அவைகளைச் சோதித்து உண்மையானவைகளை ஏற்றுக்கொண்டு சந்தேகமானவை களைத் தள்ளுபடி செய்வதற்காக ஒரு அதிகாரியை நியமித் தார்கள். அவருக்கு இனும் பரிசோதகர் என்று பெயர். அவர் பல ஊர்களிலும் இருந்த இனும்களை விசாரித்து அறிந்து தெரிவிப்பதற்கு அவருக்குக் கீழாக உதவி அதி காரிகள் வைக்கப்பட்டிருந்தார்கள். திருநெல்வேலிச் சா கத்தில் இருந்த ஓர் அதிகாரி பல மடங்களைப் பற்றியும் விசாரித்துச் செல்லுகையில் வியப்பான பெயர் கொண்ட ஒரு மடத்தைக் கண்டார். மடத்துத் தலைவன் அம் மடத்தின் பெயரை 'சும்மா இரு' மடம் என்றான். 'சும்மா இருக்கிற சோம்பேறி மடத்திற்கு யாதும் தரமாட்டேன்' என்று சொல்லி அதிகாரி அம்மடத்தின் இனும்களைத் தள்ளிவிட்டான். மடத்துத் தலைவன் யாதும் செய்யத்தெரி யாமல் திகைத்துக் கொண்டிருந்தான். ஒருநாள் மேல் அதி காரி வந்தான். அவனிடம் தன் கெதியைச் சொல்லி முறையிட்டான் தலைவன். மேல் அதிகாரியோ வியப் படைந்து 'சும்மா இரு' என்று ஏன் உங்கள் மடத்திற்குப் பெயர் வந்தது என்று கேட்டான். 'இது எங்கள் மடத் தின் நோக்கம். இங்கிருக்கும் துறவிகள் சும்மா இருக்கச் சாதனம் செய்தவர்களே இருக்கவேண்டும்' என்றான். 'அதற்கு என்ன கஷ்டம் எவரும் சும்மா இருக்கக் கூடாதா? எவனும் இதில் சேரமுடியும் அல்லவா?' என்றான் அதிகாரி. 'ஐயனே அப்படியல்ல. சாதனம் இல்லாவிடில் எவரும் சும்மா இருக்க இயலாது. ஐந்து நிமிடம்கூட இருக்க முடியாது. கையோ வாயோ மனதோ ஏதாவது வேலை செய்து கொண்டிருக்குமே ஒழிய சும்மா இருத்தல் அரிது. உதாரணமாக நீங்கள் ஐந்து நிமிஷம் சும்மா இருந்து காட் டுங்கள்' என்றான் தலைவன். அதிகாரி இருந்து பார்த்தான். ஒரு நிமிஷமும் சும்மா இருக்க முடியவில்லை. கணக்கைப் பற்றியும் அரசாங்கத்திற்கு அனுப்பும் செய்திகளைப் பற்றி யும் மேன்மேலும் நினைவுகள் வந்தன. உடனே அதிகாரி

'சும்மா இருப்பது அரிதுதான்' என்று சொல்லி அம் மடத்திற்கு இருந்த இனம் நிலங்களை அம்மடத்திற்கே தந்துவிடும்படி உத்தரவு இட்டான். இந்தக் கதையைக் கூறி அந்தக் காரணத்தினுல்தான் சும்மா இரு என்பதன் மேற்கோள்கள் முழுதும் அறிய முயற்சித்து வருகிறேன் என்று அந்த ஜெர்மானியத் துறவி கூறினுர். அதன்பின் அம்மேற்கோள்களை ஆராய நானும் முயற்சித்தேன்.

'சும்மா இரு'த்தலைப் பற்றி முதலாக எடுத்துப் பாடிய பெரியார் அருணகிரிநாதர். அவர் 15-ம் நூற்றூண்டில் இருந்தவர். அவாது புகழ் பெற்ற பாடல் கந்தானுபூதியில் 12-ம் பாடலாக இருக்கிறது.

" செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இருசொல்லற வென்றலுமே
அம்மா பொருளொன்றும் அறிந்திலனே "

இதில் 'சொல் அற' 'சும்மா இரு' என்று குரு சொன்ன சொல் என்று அவர் அறிவிக்கின்றூர். இதனையே கந்தாலங்காரத்தில் 10-ம் செய்யுளில்

" சொல்லுகைக்கில்லை யென்றெல்லா மிழந்து சும்மாவிருக்கும்
எல்லையுட் செல்ல எனை விட்டவா "

என்று கூறுகிறூர்.

பின்னுல் வந்த சிதம்பர சுவாமிகள் தம் திருப்போரூர் சந்நிதி முறையில்

" சும்மாஇரு வெனநீ சொல்லப் பொருள் ஒன்றும்
அம்மா அறிந்தில மென்றன்றுரைத்த—எம்மான்
அருணகிரி நாத அறுவனா யேற்குக்
கருணை மொழி போரூரா காட்டு "

என்று அருணகிரிநாதர் வாக்கை சுட்டிக்காட்டி ஆசிரியர் அதனை வற்புறுத்துகிறூர்.

தாயுமான சுவாமிகளும் அதனையே வற்புறுத்தி,

‘ பிறர் கேட்கவே போதிப்ப தல்லாது
சும்மா இருந்து அருள்
பொருந்திடாப் பேதை நானே ’

என்கிறார். மேலும் அவர்

‘ சொல்லால் முழக்கிலோ சுகமில்லை
மௌனியாய்ச் சும்மா இருக்க அருளாய் ’

என்றும்,

‘ சும்மா இருக்க எண்ணினேன்
எண்ணமிது சுவாமிநீ அறியாததோ ’

என்றும் புலம்புகிறார்.

மற்றும் அவரே

சும்மா விருக்கச் சுகஞ்சுக மென்று சுருதியெல்லாம்
அம்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டு மறிவின்றியே
பெம்மான் மவுனி மொழியையுந் தப்பியென் பேதைமையால்
வெம்மாயக் காட்டி லலைந்தேனந் தோவென் விதிவசமே.

சும்மா விருக்கச் சுகமுதய மாகுமே
இம்மாயா யோகமினி யேனடா—தம்மறிவின்
சுட்டாலே யாகுமோ சொல்ல வேண்டாங் கன்ம
நிட்டா சிறுபிள்ளாய் நீ.

என்று அருளிச் செய்திருக்கிறார்.

மேலும் தனிப்பாடலில்

“ வாகன மேறிச் சேணிற்
சும்மா திரிமூர்த்தி யல்லாமல் ”

(தனிப்பா - 11 - 246, 581)

என வருகின்றது காண்க.

இனி பல்கலைக் கழகத்துப் போகராதியில் ‘ சும்மா இரு ’ என்பதற்கு 12 பொருள்கள் கூறப்பட்டன உற்று நோக்கில் எல்லாம் ஒன்றே என்று அறியலாம். அவையாவன: சுகமாக, தொழிலின்றி, இயல்பாய், அமைதியாய், வறிதாக, காரணமின்றி, பயனின்றி, கருத்தின்றி, விளையாட்டாய்,

இலவசமாய், தடையின்றி, அடிக்கடி என்ற 12 பொருள்கள் அச்சொல்லுக்குக் கூறப்பட்டுள்ளன. இவை எல்லாவற்றிற்குச் சிறப்பாகப் புலவர்களால் ஆளப்பட்ட பொருள் அந்த அகராதியில் கூறப்படவில்லை. அப்பொருள் 'செயலற்று இருத்தல்' என்பது. அதையேன் விட்டார்களோ அதற்குள்ள மேற்கோள்களை ஏன் புறக்கணித்தார்களோ அறியோம்.

இனி சும்மா இருத்தல் என்பது மனம், வாய், மெய் என்பவைகளால் செயலற்று இருக்கும் தன்மை ஆகும். அது மிகுந்த தவம் உடையார்க்கே ஆகும். இம்முப்பொறிகளையும் கட்டி வைப்பது மிகக் கடினம். 'காற்றையும் கட்டி வைக்கலாம். மனதைக் கட்டி நிறுத்துதல் அரிது' என்று கீதை கூறுகிறது. ஆகவே சும்மா இருத்தல் வெறும் சோம்பல் கொண்டிருத்தல் அன்று முப்பொறிகளை அடக்கி வைத்தல் ஆகும். சிறப்பாக மனதை பிறரிடம் சொல்லாது நிறுத்துதல். ஆகவே இச்செயல் வெறும் எதிர்மறையன்று. உடன்பாட்டு முறைச் செயல் ஆகும் இது தவமுடையார்க்கே ஆகும் என்க. வாய்ப்பூட்டு இட்டுக் கொண்டிருப்பது அன்று. வாரத்திற்கு ஒருநாள் பேசாமல் இருப்பதன்று. வாய் பேசாமல் இருக்கலாம். மனது கெட்ட செயல்களை நாடிச் செல்லும். ஆகவே மனதை அடக்கிச் சும்மா இருத்தலே சாலச் சிறந்தது. இது எளிதில் ஆகக்கூடியதோ ? இதனைத்தான் ஆராய்கிறார்கள் யாழ்ப்பாணத்து ஜெர்மானிய துறவிகள்.

---

## 6. கவிப் பகுதி

# "தமக்கும் உண்டு"

C. K. சுப்பிரமணிய முதலியார்

"அங்கேயும் அப்படித்தான்" இரண்டு திருடர்கள் தனித்தனியாய் ஒரே இடத்தினின்றும் ஒவ்வோர் பொருளைத் திருடிக்கொண்டு அந்தப் பொருள்களைத் தங்கள்

தங்கள் சொந்தப் பொருள்களாகக் காட்டிப் பகட்டிக் கொண்டு வெளியில் திரிந்தார்கள். ஆனால் அவர்கள் ஒன்று கூடித் திருடாவிட்டாலும், அவர்களுக்குள் ஒருவன் திருடிய சொத்து மற்றவனுக்குத் தெரியும். ஒருவன் மற்றவனைச் சுட்டி இவன் இன்ன இடத்தில் திருடிய சொத்தைக் கொண்டு மினுக்குகின்றான் என்று ஊரெல்லாம் அலர் தூற்றினான். அதைத் தெரிந்த மற்றவன் அவனைச் சுட்டி அங்கேயும் அப்படித்தானே! இன்ன இடத்தில் திருடிய இன்ன சொத்துத்தானே அங்கேயும் பகட்டுகிறது என்று சிரித்துப் பரிகசித்தான். தலைப்பில் கண்ட சொற்றொடருக்குப் பொருள் இதுதான்.

விளைந்த தானியங்களைப் பதுக்கி ஒன்றுக்கு ஐந்து பங்கு கள்ள வியாபாரம் செய்து மக்களை அரைப்பட்டினி போட்டு இந்த விவசாயி நாகரிக வாழ்க்கை மேம்பட்டு மோட்டார் சவாரி செய்கிறான், என்று அலர் தூற்றுகிறான் பஞ்சு, நூல், துணி வியாபாரி; அதைக் கேட்ட உழவன் இருந்த இடத்திலேயிருந்தபடியே நூல் கட்டுகளையும் துணிகளையும் விற்று விட்டதாக எழுதி எழுதி விலையை நூறுபங்கு உயர்த்தி ஆணும் பெண்ணும் அரை நிர்வாணமாகத் திரியச் செய்து இவன் ஆளுக்கு 2, 3 மோட்டார் வைத்து ஓடியாடி ஆகாயத்தில் பறக்கிறான் என்று சொல்லிச் சிரிக்கிறான்.

> "ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பின்
> தீதுண்டோ மன்னு முயிர்க்கு"

என்பது பொய்யாமொழி.

ஒருவன் பிறனொருவனைக் குறை சொல்வதற்கு முன் தன்னிடத்தும் அக்குற்றமுண்டோ என்று ஆராய்வானாயின், உலகில் மக்கட் கூட்டத்தில் வரும் எத்தனையோ தீங்குகளும் வாராமற் காக்கலாம். ஏசுநாதர் சரிதத்தில் ஒரு நிகழ்ச்சி இங்கு நினைவுக்கு வருகின்றது. ஒருவன் ஒரு குற்றம் செய்ததற்காக அவனைக் கல்லாலெறிந்து கொன்று விடுவதென்று அவர் சீடர்கள் தீர்மானித்து அத்

தண்டனையை நிறைவேற்றத் தொடங்கினார்கள். ஏசுநாதர் குறுக்கிட்டு அவர்களைப் பார்த்து நீங்கள் சொல்வது சரியே. ஆனால் முதலிற் கல்லெறிபவர் குற்றமில்லாதவராக இருக்கவேண்டும் என்றார். அவர்கள் ஒவ்வொருவரும் தத் தமக்குள் சிந்தித்து " 'யான் குற்றமுடையேன் யான் குற்ற முடையேன்' ஆதலில் முதலிற் கல்லெறியத் தகுதியில் லேன் " என்று ஒவ்வொருவரும் பின்வாங்கி நின்றுவிட் டார்கள் என்பது அச்சரிதம். தம் குற்றம் நாடாது பிறரைக் குற்றம் சொல்லும் கெட்ட வழக்கமே உலகத்திற் கொடுமை களுக்கெல்லாம் காரணம் என்று வற்புறுத்தி உபதேசித் தருளுகின்றார் திருநாவுக்கரசு நாயனார். " பேச்சொடு பேச்சுக்கெல்லாம் பிறந்தமைப் புறமே பேசக் கூச்சலே னுதலாலே கொடுமையை விடுமாறேரேன் " என்பது அவ ரது திருவாக்கு. இரண்டு பேர் எங்குக் கூடினாலும் எவ்வகை யாலும் பிறர் குற்றம் பேசிக் களிப்பதே மனித இயற்கை யாய் விளைந்துவிட்டது. இக்காலம் பிறர் நன்மையும் சீரும் எடுத்துப் பேசப்படுவது அரியதாயிற்று.

இவ்வுண்மையை எங்கள் தூய தொண்டை நாட்டுச் செடிகொடிகளும் உலகுக்கு எடுத்துக் காட்டி உபதேசித்து நிற்கின்றன, கண்ணிருந்து காண்பீர்களாகிற் காணலாம் என்று ஒரு பாட்டிற் கற்பிக்கிறார் எங்கள் தெய்வக் கவிஞர் பெருமான். அக்கவி இதன் தலைப்பில் காட்டப்பட்டுள்ளது. தொண்டை நாட்டின் " நானிலத் தைந்திணை வளமும் தெரிந்து கூறவருகின்றார் ஆசிரியர் சேக்கிழார் பெருமான். அதனை இவர் சொல்லியதுபோல வேறு யாவர் சொல்ல வல்லார் என்று ஆசிரியர் எமது மாதவச் சிவஞான முனிவர் பேசவந்து முல்லை நிலமும் திணையும் அங்கே அந்நிலைக் குரிய கருப்பொருள்களாகிய களாச் செடியும் முல்லைக் கொடியும் அருகருகே வளர்க்கின்றன ஏன்? " குருந்த மேறிக் கோடிவிடு மாதவி " " செல்வம் மல்கு செண்பகம் வேங்கை சென்றேறிக் கொல்லை முல்லை மெல்லரும்பீனும் " என்று உயர்ந்த தன்மையணிச்சுவை, ஆளுடைய பிள்ளை யார் அருளியபடி, களாச்செடி (மாம் என்றலுமாம்)யின்

மேலே படர்ந்து அரும்பிற்று முல்லை. களாவும் மலர்ந்தது. இவை செடியும் கொடியுமாக ஒன்றற்கொன்று அணியன வாகி நட்புப் பூண்டு பேசியும் சிரித்தும் குலாவின போன் றிருந்தன. செழுமையும் கொழுமையு முடையனவாய் மக்களால் செயற்கை யளவில் உண்டாக்கி வளர்க்கப்படாது தம்மியற்கையின் வளம்படத் தழைத்து நின்ற அழகிய நிலையை நோக்கிக் கொண்டு பக்கத்தில் அந்நிலத்து மக்க ளாகிய இடைக்குலப் பெண்கள் புன்னகை பூத்து விளை யாடி நின்றனர். களா மலர்ந்து அலர்கள் சொரிகின்ற தோற்றம் அவை எதுவோ எதுவோ ஒரு உட்குறிப்புக் கொண்டு அலர் தூற்றுவனவாக முல்லைக் கொடிக்குத் தோன்றிற்று. அலர் தூற்றுதல், அவர்களைச் சிதறுதல் என்றும், பழிச்சொல் பரப்புதல் என்றும், இருபொருளும் பட நிற்பது காண்க. இங்குக் களாச்செடி அலர் தூற்றுத லாவது முல்லை யரும்புகளைப் பார்த்து இவற்றுக்கு இந்த வெண்மை, கூர்மை, வரிசை முதலிய பண்புகள் வேறு எங்கு நின்றும் போந்தன. இந்த இடைச்சியர்களது பல்வரிசைகளின் பண்புகளையே முல்லை திருடிக்கொண்டு மினுக்குகின்றன என்று உட்கொண்டு பழிச்சொல் பரப்பிச் சொல்வதாம். இதனைக் கண்ட முல்லை அந்தக் களாவின் அலர் தூற்றல் கண்டு அத்திருடன் அங்கேயும்தான் உண்டு. இடைக்குல மக்களின் குழலின் கரிய நிறத்தையே களவு செய்து களாக் கனிகள் கனிந்தன என்று எதிர் இகழ்ச்சிக் குறிப்புடன் சிரிப்பன போன்று மலர்ந்தன. இவை தற் குறிப்பேற்ற அணி என்பர் தமிழ் வாணர். இதன் உள் ளுறையாவது மேலே தலைப்பில் விரித்த உள்ளுறையினை இத்தாவரங்களின் மேல் வைத்து உலகுக்கு உபதேசிக் கும் முறைமையாம். இதனுள் தொண்டை நாட்டு முல்லை நில இயற்கை அழகினையும் அதன் கருப் பொருள்களையும் மக்களையும் உள்ளபடி எடுத்துக் கூறியபடியுமாம்.

"பிளவு கொண்டதன் மதிநுதற் பேதைய ரெயிற்றைக்
களவு கொண்டது தளவெனக் களவலர் தூற்றும் ;

அளவு கண்டவர் குழனிறங் கனியுமக் களவைத்
தளவு கண்டெதிர் சிரிப்பன தமக்குமுண் டென்று"

(திருக்குறிப்பு - புரா-17)

என்பது ஆசிரியர் தெய்வச் சேக்கிழார் பெருமானது அருட்டிருவாக்கு.

---

7. ஆராய்ச்சிப் பகுதி

# பண்டைச் சைவர் கல்விமுறை

## (கி. பி. 300-1300)

(டாக்டர் மா. இராசமாணிக்கம், M A., L. T., M. O. L.)

1. பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் பல வடமொழிக் கல்லூரிகள் இருந்தன. பல்லவ அரசர்கள் பலர் வடமொழியிற் சிறந்த புலமை பெற்றிருந்தனர்; பாரவி, தண்டி போன்ற புலவர்களை ஆதரித்தனர். மூன்றும் நந்திவர்மனும் அபராசிதவர்மனும் சிறந்த தமிழறிஞர்கள் என்பதும், பின்வந்த சோழர்கள் சிறந்த தமிழறிஞர்கள் என்பதும், அவருள் விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகிய மூவரும் ஒட்டக்கூத்தர் மாணவர் என்பதும், மூன்றும் குலோத்துங்கன் கம்பர் முதலிய புலவர்களுடன் பழகிய தமிழறிஞர் என்பதும் நாமறிந்தனவே. பல்லவர் காலத்தில் தமிழ்க் கல்வி எங்ஙனம் இருந்ததென்பதை விளக்க, ஐயடிகள் காடவர்கோன், காரைக்காலம்மையார், கபிலதேவர் முதலிய அடியார்கள். அப்பர், சம்பந்தர், சுந்தரர், சேரமான்பெருமாள், மாணிக்கவாசகர் முதலியோர் அருட்பாடல்களும், நந்திக்கலம்பகம், பாரதவெண்பா முதலிய இலக்கிய நூல்களுமே சிறந்த சான்றாகும்.

கண்டாதித்தர், இரண்டாம் குலோத்துங்கன் முதலிய சோழர்கள் கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தனர் என்பதும் இராஜேந்திரன் I 'பண்டித சோழன்' எனப் பாராட்டப் பட்டான் என்பதும் சைவ அரசர்கள் பெற்றிருந்த புலமையை நன்குணர்த்தும்.

2. ஐந்து வயதில் மயிர் நீக்கிக் கல்வி தொடங்குதல் வழக்கம்[1]. பிராமணராயின் பூணூற்சடங்கும் செய்தபிறகே கல்வி தொடங்கப் பெறும்[2]. மயிர் நீக்கல் சைவச்சடங்குகள் பதினாறனுள் ஒன்று. இப்பதினாறும் ஒவ்வொரு ஞானப் பொருளைக் குறிப்பன எனவும், அவற்றுள் மயிர்நீக்குதல் சிவப்பிரசாதத்தின் உயர்வைக் குறிப்பதெனவும் சிவாகமம் கூறும்[3]. கல்வி நற்பொருள்களை வெள்ளம்போலப் பெருக உதவி - அறிவு விளங்கச் செய்தலால் மனம் சுருண்டிருந்த நிலையை நீக்கி மலரச்செய்யும் இயல்புடையது என்று அக் காலத்தவர் கருதினர். அவர்கள் இலக்கியக் கல்வியும் "பொருள் நீத்தங் கொளவீசிப் புலன்கொளுவ மனமுகிழ்த்த சுருணீக்கி மலர்விக்குங் கலை பயிலத் தொடங்குவித்தார்"[4]. "சிவம் முயன்றடையும் தெய்வக்கலைகள் பலவும்"[5] கற்றனர். பின்னவை வேதம், சிவாகமம், வேதாங்கம், புராணம், இதிகாசம், ஆயுள் வேதம் என்பன[6].

3. சைவர்கள் பொதுக்கல்வியும் சமயக்கல்வியும் மருத்துவம், வானூற்கலை முதலிய பல்கலைக் கல்வியும் கற்றிருந்தனர் என்பது சேக்கிழார் பெரியபுராணங்கொண்டு நன்கறியலாம். அந்நூலில் சேக்கிழார் தாம் பல்கலைப் புலவர் என்பதை நன்கு நிலைநாட்டியுள்ளார்[7]. எனவே, பண்டைத் தமிழ்க் கல்விமுறையில் பொதுக்கல்வி, சமயக்கல்வி, பல்கலைக் கல்வி என முத்திறக் கல்வி இருந்திருத்தல்வேண்டும் என்பது தெரிகிறது. அத்துடன் தொழிற்கல்வியும்

---

1. அப்பர்புராணம். செய். 20-1. 2. தடுத்தாட்.புரா. செய். 6. 3. C.K. சுப்பிரமணிய முதலியார், அப்பர் புரா. பக். 29. 4. அப்பர் புரா. செ. 20; சிறுத். புரா. செ. 22. 5. பெ. 9. நாட்டுச் சிறப்பு. 18. 6. C.K.S.முதலியார். பெ.புரா. Iபக். 7. பெ.புரா. ஆராய்ச்சி, பகுதி 10; C.K.S. முதலியார். "சேக்கிழார்"

இருந்தது. புரவித் தொழில், யானைத்தொழில், தேர்த் தொழில், வில், வாள் முதலிய படைக்கலத் தொழில்கள்[8] இருந்தன. இத் தொழில்களில் அக்காலத்திற் சைவர்கள் நன்கு பயின்றிருந்தனர் என்பது இயற்பகையார், ஏனாதி நாதர், கோட்புலியார், முதலியோர் வரலாறுகளிலிருந்து அறியலாம். சத்தியார் கத்தி வைத்திருந்ததும், எறிபத்தர் கோடரி வைத்திருந்ததும், இயற்பகையார் வாட்போரும் அக்காலத்து அடியார்கள் ஆயுதப் பயிற்சியில் வல்லவர்கள் என்பதை வலியுறுத்துகின்றன.

4. சிவன் கற்றூர்கள் நாவினான்[9]'' என்றும், "கற்றிருந்த கலைஞானம் ஆனாய்''[10] என்றும் சிவனையே கலைஞானம் என்றும் கூறலைநோக்க, அப்பர் காலத்தில் கல்வியைப் பற்றிச் சைவர் கொண்டிருந்த மனப்பான்மை நன்கு விளங்கலாம். அப்பரும் சுந்தரரும் சங்க நூற்களை நன்கு பயின்ற சைவர் என்பது தருமிக்குப் பொற்கிழி அளித்தமை, பாரிபற்றிய குறிப்பு இவற்றிலிருந்து தெரிகிறது[11]. சுந்தரர் காலத்தில் புலவர்கள் பலர் இருந்தனர் என்பதும், அவர்கள் நன்கு படித்தவர்கள் என்பதும் சுந்தரர் பாடல்களிலிருந்து தெரிகின்றன.[12] "தண்தமிழ்நூற் புலவர்க்கோர் அம்மான்[13]'' என்று சுந்தரர் கூறலிலிருந்து, அக்காலப் புலவர் பலர் சைவரென்பது பெறப்படும். கல்வி உயிர்க்கு இனியது என்பதும், அதனினும் இனியவன் சிவன் என்பதும் சுந்தரர் கருத்து.[14]

5. திருமூலர் காலமுதல் உமாபதிசிவம் காலம்வரை திருமந்திரம் முதலிய சித்தாந்த நூல்கள் சைவர்களால் நன்கு படிக்கப்பட்டுவந்தன. அருணந்தி சிவாசாரியாரை மெய்கண்டாருடைய தந்தையார் சமயகுருவாகக் கொண்டிருந்தமையும், மாளிகைமடத்து ஆசாரியரிடம் ஒருவர்

---

8. பெ. புரா. நாட்டுச் சிறப்பு. செ. 18 ; C.K.S. முதலியார் உரை, பாகம் I, பக். 124. 9. அப்பர் பக். 390, செ. 6. 10. அப்பர் பக். 392. செ. 6. 11. அப்பர் பக் 473. செ. 3 ; சுந்தரர், பக் 45, செ. 2. 12. சுந்தரர் பக். 457 ; 114, செ. 11. 13. சுந்தரர் பக். 231. செ 6. 14. சுந்தரர் பக். 155, செ. 5.

உபதேசம் பெற்றமையும் பொதுமக்கள் சமயக்கல்வியில் காட்டிய ஆர்வத்திற்கேற்ற சான்றுகளாகும்.[15]

**பெண்கள் கல்வி :**—சைவப் பெண்களும் சைவ ஆண்களைப் போலவே கல்வி கற்றிருந்தனர் என்பதற்குக் காரைக்காலம்மையாரே ஏற்ற சான்றாவர். பெண்கள் அம்மானை, பந்தாட்டம் முதலிய பலவகை விளையாட்டுக்களிலும் சிவனைப்பற்றிய பாடல்களைப் பாடினர் என்பது சம்பந்தர் தேவாரத்தால் தெரிகின்றது. "தருந்தடக்கை முத்தழலோர் மனைகள்தொறும் இறைவனது தன்மை பாடிக் கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப் பாட்டயரும் கழுமலமே" 16 4. பூக்கொய்தல் முதலிய பலவகை விளையாட்டுக்களிலும் பெண்கள் இங்ஙனமே சிவனது சிறப்பைப் பாடி விளையாடினர் என்பது திருவாசகத்தால் தெரிகிறது. காரைக்காலம்மையார் பாடல்களில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் இருந்தாலும், சோழர் காலத்து மாளிகை மடத்து ஆசாரியரிடம் மாணவி ஒருத்தி சமயக்கல்வி பயின்றனள் என்பதும், பெண்களும் சமயசாத்திரப் பயிற்சியுடையாராயிருந்தனர் என்பதை உணர்த்துகின்றன. திலகவதியார், மங்கையர்க்கரசியார், செம்பியன் மாதேவியார் போன்ற சைவத் தாய்மார்கள் சைவசித்தாந்த உண்மைகளை அறியாதவர்கள் என்று கூற முடியுமா ?

---

# மடாலயங்கள்

அழகுமதியன்

நமது தென்னாட்டில் 200 மடாலயங்களுக்கு மேலேயே இருக்கின்றன. அவைகளில் சைவமடங்கள் பத்தும் வைணவ மடங்கள் ஐந்தும் வீரசைவ மடங்கள் பத்தும் மிகச்சிறந்தவை. இவைகள் ஒவ்வொன்றிற்கும் மடக் கட்டடங்களும் சொத்துக்களும் உண்டு. மடத்துத் தலைவர்

15. 49 of 1911 ; A.R.E. 1909, பக். 75. 16. பக். 205. செ. 2. ; தடுத்தாட் புரா. செ. 135.

களும் அவர்களின் கீழ் சிறு குருமார்களும் பொதுச் சீடர்களும் இருப்பார்கள். மடத்துத் தலைவர்களும் குருமார்களும் துறவிகளாக இருப்பார்கள். இவர்கள் எப்போதும் சமயப் பணிகளிலே ஈடுபட்டு கடுமையான நோன்புகளைக் கைக்கொண்டு சமய நூல்களைப் படித்துக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருப்பார்கள். மன்னர்களும் செல்வர்களும் மடங்களுக்குத் தானதருமங்கள் செய்து குருமார்களுடைய ஆசிகளைப்பெற்று வந்தார்கள். இந்த முறையில் மடாலயங்களின் சொத்துக்கள் நாளுக்கு நாள் பெருகி வந்து தலைவர்கள் பெரிய நிலச் செல்வர்களாகி விளங்குகிறார்கள். திருவாவடுதுறை தருமபுரம் போன்ற பெரிய சைவ மடங்கள் அனேக தம்பிரான்களைத் தம்முள் வைத்துக் கொண்டு பல சமய நிலையங்களைப் பரிபாலித்தும் வருகின்றன. இம்மடங்களே சைவத்தையும் தமிழ் மொழியையும் தமிழ் மன்னர்கள் மறைந்த பின்னர் ஆதரித்து வந்திருக்கிறவைகள்.

மடாலயங்கள் பெரும்பாலும் சிறந்த சமயக் குருமார்களால் தோற்றம் செய்யப் பெற்றவைகள். அக்குருமார்கள் சிறந்த அற்புதங்களைச் செய்தவர்களாக இருப்பார்கள். அல்லது தியாகம் செய்தவர்களாக இருப்பார்கள். அவர்களுக்குப் பல சீடர்கள் தோன்றி அவர்களுக்குத் தொண்டு செய்வார்கள். அப்பெரியார்கள் மறைய அவர்களது சமாதிகளின் பேரிலோ இருந்த இடத்திலோ ஒரு புனிதக் கட்டடமோ ஆலயமோ தோன்றும். அது நாளடைவில் பல அற்புதச் செயல்களை விளைவிக்கும். மாணவர்கள் மிகுதியாகத் தோன்றுவார்கள். சமயப் பணிகளும் சமய உபதேசங்களும் நடைபெறும். பல மன்னர்களும்செல்வர்களும் வந்து தம் கோரிக்கைகளை நிறுவிக் கொள்ளுவார்கள். அவ்வாறு கோரிவந்தவர்கள் தம் மனம் இசையத் தான தருமங்கள் கொடுத்து அந்நிலையங்களைப் பெருக்குவார்கள். இந்த முறையில் மடங்கள் தோன்றின. சமய வாழ்க்கையில் சிறந்தவர்கள் இருக்கும் மட்டும் அம்மடம் சிறந்து ஓங்கும். சமய வாழ்வில் குறைகள் தோன்றினல் மடம் குறைவுபட்டு மழுங்கிப் போகும். காலாகாலங்களில் அனேக மடங்கள்

தோன்றின போதிலும் சில மடங்களே மிகப் பெரிதாக விளங்கியிருக்கின்றன. பல அழிந்து போயின. தென்னாட்டிலும் அழிந்த மடங்களுக்கு அளவில்லை. சிதம்பரம் திருவண்ணாமலை முதலிய இடங்களில் அவ்வாறு அழிந்த மடங்களைக் காணலாம்.

மேலும், மடத்துத் தாபகர் சிறந்த புனிதவானாய் இருந்தால் அம்மடம் பெருகிக் கொண்டே இருக்கும். அவர் இயற்றிய அற்புதச் செயல்களே அவரது மடத்தை மறவாத படி செய்யும். அப்படிப்பட்ட தலைவர் திருமேனி படிந்த இடம் மிகவும் புனிதமாகக் கொண்டாடப்படும். மடத்தலைவர்கள் துறவிகள். அவர்களுடைய திருமேனிகள் எரிக்கப் படாமல் புதைக்கப் பெறும். அந்த இடங்களில் அழகிய சமாதியோ கோயிலோ கட்டப்படும். அந்த நிலையம் வெகு புனிதமாக வைக்கப்பட்டு ஆராதனைகள் செய்யப்பெறும். ஆண்டுதோறும் நடக்கும் பெரிய ஆராதனைகளோ திருநாள்கள் அல்லது குருபூஜை என்றுசொல்லப்படும். எல்லா மடங்களிலும் தாபகரின் குருபூஜை சிறப்பாக நடைபெறும். ஆயிரக்கணக்கான சீடர்கள் வந்து வணங்கி விட்டுக் காணிக்கைகளைச் செலுத்தி விட்டுச் செல்வார்கள். சைவ வைணவ வீரசைவக் குருபூஜைகள் தென்னாட்டில் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. ஒரு புனித துறவியினுடைய சமாதியின் பேரில் தோன்றிய மடமே நிலைத்துநிற்கும் மடமாகும். திருமூலர் மறைந்த இடத்தில்தான் திருவாவடுதுறை தோன்றி யிருக்கிறது. குருஞான சம்பந்தர் மறைவு இடத்தில் தான் தருமபுரமடம் தோன்றி யிருக்கிறது. பொம்மைய பாளைய பாலையர் மடம், திருப்பேரூர் சாந்தலிங்கர் மடம், துறையூர் குமாரதேவர் மடம், போரூர் சிதம்பர சுவாமிகள் மடம் இவைகளை எல்லாம் தாபகர்களின் சமாதியைப் பின் பற்றித் தோன்றினவைகள்.

அப்படித் தோன்றிய மடங்களிலேதலைவர்களாக இருப்பவர் துறவியாகையால் அவருக்குச் சீடர்கள் இருப்பார்கள். தலைவர் இறக்கும் தருவாயில் சீடர்களில் ஒருவரை வாரிசாக நியமித்துச் செல்வார். அவரே பட்டத்திற்கு வரு

வார். இவ்விதம் பட்டத்து உரிமை பெற்று வரும் தலைவர் நியமனம் செய்யாமல் இறந்துபோனால் மற்றச் சீடர்கள் கூடி ஒருவரைத் தெரிந்தெடுப்பார்கள். அவரே பட்டத்திற்கு வருவார். இவ்வாறு பட்டம் பாம்பரையில் ஏற்படுகிறது. சில மடங்களிலோ இளைய பட்டம் கட்டுவது உண்டு. அப்போது பாம்பரைத் தகரார் வருவதில்லை. ஆனால் பட்டத்திற்கும் சொத்துக்கும் ஆசைப்படும் துறவிகள் சேர்ந்து விட்டால் பிறகு சொத்தைப் பெறுவதற்காகச் சண்டைச் சச்சரவுகள் கொலை களவுகள் நேரிடுவது உண்டு. தென்னிந்திய மடங்களில் அவ்வாறு அடிக்கடி நேரிட்டு இருக்கின்றது. ஆகவே சில துறவிகள் சின்னப் பட்டம் கட்டுவதை நிறுத்தியே விட்டார்கள். தென்னாட்டு மடங்களில் சின்னப்பட்டம் கட்டாமல் நின்று போனதற்கு இதுவே காரணம். பல மடங்களில் தகுதியற்றவர்கள் தோன்றுவது உண்டு. அப்போது மடத்தினுடைய மதிப்பு குறைவதுண்டு. இது உலகெங்கும் சகஜமே.

இனி, ஆங்கில நாட்டில் வெகு பிரபலமாய் இருந்த ஒரு மடத்தின் வரலாற்றைச் சிறிது கூறி, அதனை நமது மடங்களுக்கு ஒத்திட்டுப் பார்க்கலாம். இலண்டன் நகருக்கு 10 கல் தொலைவிலே செய்ண்ட் ஆல்பன் என்ற ஊர் இருக்கிறது. இங்கே அனேக நூற்றாண்டுகளாக ஒரு பெயர் போன மடம் ஒன்று இருந்தது. எல்லா மடங்களும் ஹென்றி VIII காலத்தில் அழிக்கப்பட்டுப் போக இந்த மடமும் அழிந்தது. ஆனால் அதுவோ பல நூற்றாண்டுகளாக விளங்கி இருந்தது என அறிய வேண்டும். அதன் வரலாறும் மிகச் சிறந்தது என்று கூற வேண்டும். உரோமானியர் இங்கிலாந்தைப் பிடித்து அந்த இடத்திலே ஒரு ஊரைக் கட்டி அதிலே ஒரு படை வீட்டை அமர்த்தினார்கள். நாளுக்குநாள் அது செல்வாக்குப்பெற்றுப் பெருகிற்று. உரோமானிய சேனைகளுடன் கிறிஸ்து சமயமும் புகுந்தது. பலபேர் கிறிஸ்துவர்கள் ஆனார்கள். டியோகிலீஸியன் (Dioclesian) என்ற மன்னன் கிறிஸ்து சமயத்தை வெறுத்து கிறிஸ்துவர்களை வதை செய்தான். அப்போது

வெருலம் நகரத்தில் ஆல்பேனஸ் என்ற பிரிட்டன் இருந்தான். அவன் தனது கிறிஸ்தவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்டவன். அவனால் மற்றவரும் கிறிஸ்து சமயத்தைத் தழுவி யிருந்தார்கள். அதனைக் கண்ட மன்னன் அவனை எச்சரித்தும் பயன் இல்லாமல் போக அவனைக் கொலை புரிவித்தான். இரத்தம் சிந்தும் தருணத்தில் பல அற்புதங்கள் நடைபெற்றனவாம். மக்கள் அவனைப் புனித மகனாகக் கொண்டு இரத்தம் சிந்தின இடத்தில் ஓர் ஆலயம் கட்டி வழிபட்டார்கள். ஆலயமும் நாளுக்குநாள் சிறந்தோங்கியது.

பிறகு, சில ஆண்டுகளில் சாக்ஸன் குலத்தார் இங்கிலாந்தில் படையெடுத்து உரோமினிய நாகரிகத்தை அழித்தார்கள். அதிலே வெருலமும் ஆல்பன் ஆலயமும் அழிக்கப்பட்டன. பிறகு $3\frac{1}{2}$ நூற்றாண்டுகள் ஆல்பன் புனிதருடைய எலும்புகள் இருந்த இடம் தெரியாமல் செடி கொடி புதர்களாலே மறைந்திருந்தன. அவைகளை மனிதனால் கண்டு பிடிக்க முடியாது. கடவுள்தான் கண்டு பிடிக்க முடியும் அல்லவா ?

இங்கிலாந்து அந்த நாளில் ஏழு சிறு நாடுகளாகப் பிரிந்திருந்தது, 758-ல் மெர்சியா என்ற நடு நாட்டில் கலகம் ஏற்பட்டது. அரசனைக் கொன்றுவிட்டார்கள், பிரபுக்கள் சேர்ந்து ஒபா (Offa) என்ற வீரனை சிங்காதனம் ஏற்றினார்கள். அவனோ மற்ற நாடுகளைப் பிடித்து இங்கிலாந்து முழுவதையும் தான் ஒருவனே ஆளவேண்டும் என்று எண்ணினான். கிழக்கு ஆங்கிலியாவில் எதல்பர்ட் என்ற அரசன் ஆண்டுகொண்டிருந்தான். அவனுக்குத் தன் பெண்ணைத் தருவதாக ஒபா சொல்லியனுப்பினான்: அவன் வந்து அரண்மனையில் விருந்து அயர்ந்த பிறகு, பொன்னமளியில் உறங்கிக்கொண்டிருந்தபோது ஒரு பொறிவாயில் வழியாக இட்டுக்கொண்டுபோய் கத்திக்கிரையாக்கினார்கள். உடனே ஒபா ஆங்கிலியாவைப் பிடித்துக்கொண்டு தன் பேராசையைப் பூர்த்திசெய்துகொண்டான். ஆனால் மனம் நிம்மதி அடையவில்லை, இரவில், இறந்தவருடைய ஆவி தன்னை

வெருட்டினதுபோல் வெகுண்டான். அன்றுமுதல் கிலி பிடித்து ஊணும் உறக்கமுமின்றி துன்பப்பட்டான். தன்னு சிரியனை அண்டிக் கேட்க, அவன் உபதேசப்படி கனவில் ஆணை கிடைத்தது. சாந்த ஆல்பனுடைய சமாதியைக் கண்டுபிடித்து அங்கே ஆலயமும் மடமும் எழுப்பித் திருப் பணி செய்தால் துஷ்ட ஆவி நீங்கும் என்று அருள் கிடைத்தது

ஓபா சமயக் குருக்களை அழைத்து வெருலத்தில் கூட் டம் கூட்டினான். அது நடந்தது கொலை நடந்த ஒரு ஆண் டில் அதாவது 1-8-793-ல் அப்போது ஓபாவிற்கு 60 வய திருக்கும். பய பக்தியோடு குருமார்கள் வெருலத்தில் பேரவை கூட்டினார்கள். இறைவனைத் துதித்தார்கள். வானி லிருந்து மின்னல் மின்னி, இடி இடித்துத் தரைமீது ஒரு பேரிடி பட்டது. குருமார்களும், மன்னர்களும் அடிபணிந்து போற்றினார்கள். கடவுள் சான்று கிடைத்தது என்று எண்ணி இடிவிழுந்த நிலத்தை அகழவே அங்கு மறைந்த ஆல்பன் புனிதனுடைய எலும்புகள் முற்றும் கிடைத்தன. எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். அவற்றைக் கண்ட வுடனே நொண்டிகள் நடந்தார்கள். குருடர் பார்த்தனர். செவிடர் கேட்டனர். எலும்புக்கூட்டின் மண்டையில் தங் கத் தகடு ஒன்று அணிவித்து செய்ண்ட் ஆல்பன் என்று எழுதினார்கள். ஒரு தங்கப் பெட்டியில் அக் கூட்டைப் பய பக்தியுடன் வைத்து அடக்கம் செய்து இந்த இடத்தைப் புனிதம் ஆக்கினார்கள். உடனே ஓபா ரோம் சென்று போப் ஏட்ரியனிடம் நடந்ததெல்லாம் சொல்ல ஆல்பன் பெயரைப் புனித மக்களின் பட்டியலில் சேர்க்கும்படி ஆணை தரப்பட்டது. ஓபா இங்கிலாந்து திரும்பினதும் அந்த இடத்தில் ஆலயமும் மடமும் கட்டித் தான தருமங்களை அந்த மடத்திற்குச் செய்தான். வில்லிகாட் என்பவன் முதல் மடாதிபதியானான். இந்த விதத்தில் மடம் தாபிதமாயிற்று.

பிறகு பல தலைவர்கள் ஒருவர்பின் ஒருவராக அமர்ந் தார்கள். மடமும் பெருகிற்று, சொத்தும் சேர்ந்தது. நாளா வட்டத்தில மிகப்பெரிய மடாலயம் ஆயிற்று: ஆலயங்கள்,

மண்டபங்கள் முதலியன கட்டப்பட்டன, அழகிய சிற்பங்கள் ஓவியங்கள் இணைக்கப்பட்டன. சில குருமார்கள் புனித வாழ்வு வாழ்ந்தார்கள். சிலர் கெட்ட நடத்தை கொண்டார்கள். நாட்டில் நடந்த போர்களில் இம்மடமும் ஈடுபட்டுப் பலவித இன்ப துன்பங்களை அனுபவித்து ஹென்ரி காலத்தில் மடங்களில் மிகுந்த அக்கிரமம் நடைபெற்றுவந்ததினால் அம் மடங்கள் அழிக்கப்பெற்று சொத்துக்கள் அரசாங்கத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இந்த வகையில் ஆல்பன் மடாலயமும் தோன்றி வளர்ந்து அழிந்தது.

நமது நாட்டு மடாலயங்களிலும் சில இந்தவகையில் தோன்றி நின்று அழிந்தன. ஆனால் கெடாமல் சில மடங்கள் இருந்து நற்செயல்களைப் புரிகின்றன. அப்படிப்பட்ட மடாலயங்கள் தான் மீண்டும் வளர்ச்சி பெருகின்றன, அவைகளின் வரலாறுகளும் ஒரேமாதிரியாக இருப்பதைக் காணலாம். தமிழ்நாட்டு மடங்கள் மேல்நாட்டு மடங்களுடன் ஒத்திட்டுப் பார்த்து வளர்ச்சியின் தத்துவங்களை அறிய வேண்டாமா?

---

## 9. ஒழிபு

திருவஞ்சைக்களம் சுந்தரமூர்த்தி நாயனர்
சேரமான் பெருமாள் நாயனர்

# குருபூசை விழா

சென்ற 16 ஆண்டுகளின் முன் கோவைச் சேக்கிழார் திருக்கூட்டத்தாரின் முயற்சியால் தொடங்கப்பட்ட இவ் விழாவானது அன்றுமுதல் இன்றுவரை வளர்ச்சியடைந்து சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தொடங்கிய இரண்டாவது ஆண்டிலேயே தேவஸ்வம் அதிகாரிகளின் அன்பார்ந்த நிலையான ஆதாவு இதற்குக் கிடைத்தது. அரசாங்க உதவி அந்த ஆண்டில் கொச்சி சமஸ்தானத்துக்குத் திவா

னாக வந்த திரு. சர். சண்முகம் செட்டியாரவர்களின் பேரன்பினாலே இந்த விழாவை ஆண்டுதோறும் கோயில் அதிகாரிகள் ரூ. 100 செலவில் நிரந்தரமாக நடத்திவர வேண்டுமென்று உத்தரவு பிறந்து, அரசாங்கத்தார் கணக்கில் பதிவு செய்யப்பட்டு உள்ளது. அந்தத்தொகையை அவர்கள் மூலஸ்தானம் சுவாமி அஞ்சைக்களத் தப்பருக்குச் சங்காபிஷேகமும் மகா நைவேத்தியத்துடன் வழிபாடும் கோயில் முழுதும் புஷ்பாலங்காரம் முதலியவையும் மாலையில் தீபாலங்காரங்களும் விசேஷ பள்ளியறை உற்சவமும் நடத்திவருகிறார்கள். ஆனால் ஷ நாயன்மார்களுக்கு மகாபிஷேகம் இரவு தீபாலய மகாலங்காரம் மகாநைவேத்தியம் புராண படனம் முதலியவையும் அடியார்களுக்கு மாகேசுவரபூசை அன்னதான முதலியவைகளும் ஷ திருக்கூட்டத்தார்களின் முயற்சியாலே நடைபெற்றுவந்தன. வரவர அடியார் கூட்டம் பெருகி நிகழவே ஷ முயற்சிகள் போதாவாயின. திருப்பனந்தாள் மடத்தின் அதிபர் பேருதவி, அப்போது இறைவர் திருவருள் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகளது திருவுள்ளத்துட் புகுந்து ஊக்கியது. அதன் பயனாக, முதலாவதாகச் சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரங்களில் குறித்த 50 தேவாரங்களைப் பாடம் செய்து நன்றாய்ப் பாடக்கூடியவர்களாகிய கொச்சி நாட்டு உயர்தரப் பாடசாலை மாணவ மாணவிகளுக்குப் பரிசுகொடுப்பதற்கென்றே 5000 ரூபா மூலதனம்வைத்து அதனைக் கொச்சி சமஸ்தானத்தார் வசம் ஒப்படைத்திருக்கிறார்கள். ஷ தொகையின் வட்டி வரவிலிருந்து வருஷம் ஒருவருக்குப் பரிசு திருவஞ்சைக்களத்தில் வைத்தே தரப்படுகிறது. இதனால் அம்மலையாள நாட்டுமக்கள் தேவாரம்பயில வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது; இப்பரிசு சென்ற மூன்று வருடங்களாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

இரண்டாவதாக, குருபூசை விழாவுக்கு வரும் தமிழ் நாட்டு அடியார்கள் உணவு முதலிய வசதிகளுக்கு வருந்தாத படி ரூ.7000 கவர்ன்மெண்டு பாண்டுகளில்போட்டு ஒரு மூல

தனம் வைத்திருக்கிறார்கள். அதில் வரும் வட்டி ஊதியமானது சென்ற மூன்று வருடங்களாக இவ்விழாவில் மாகேசுவரபூசை அன்னதானம் இவற்றுக்குப் பயன்பட்டுப் பேராதரவு அளித்திருக்கிறது.

மூன்றாவதாக, சேரமான்பெருமாள் நாயனார் சுந்தரமூர்த்தி நாயனார் பெயரால் புத்தகசாலையும் சத்திரமும் அமைக்கும்பொருட்டு ரூ. 5000 நன்கொடையாக அளித்து அத்தொகையை இவ்வாண்டு தேவஸ்வம் அதிகாரிகளிடம் கொடுத்துள்ளார்கள். அது திருக்கோயிலுக்கு மேல்புறம் அண்மையில் நல்ல இடத்தில் அமைப்பதற்காகக் கொச்சி அரசாங்கத்தார் 11 செண்டு பூமியும் இலவசமாகக் கொடுத்துள்ளார்கள். இவ்விழாவுக்குத் தமிழ்நாட்டில் பல பகுதிகளிலிருந்தும் அடியார்கள் ஏராளமாக வரத்தொடங்கியிருக்கிறபடியாலும் அவர்கள் முன்னும் பின்னும் சேர்ந்து 3 நாள்வரை தங்கவேண்டியிருப்பதாலும் தங்குதற்குப் போதிய இடமில்லாமல் குறைபாடாயிருக்கிறது. இக்குறையை ஒருவாறு நீக்கவே ஷை புத்தகசாலையில் திருவிழாவுக்கு வரும் தமிழ்நாட்டு அன்பர்களுக்கு இடம்தர வேண்டும் என்று நிபந்தனையும் வைத்திருக்கிறார்கள். கொச்சி அரசாங்கத்தார் செய்யவேண்டிய கடமைகள் (1) திருக்கோயிலுக்கு முன்புறம் கொச்சி சமஸ்தானத்தாரின் பெரிய அரண்மனை விடுதி ஒன்று உள்ளது. அரண்மனைப் பகுதியும் தேவஸ்வம் பகுதியும் இப்போது வெவ்வேறு இலாகா (Dept.) ஆகிவிட்டபடியால் ஷை அரண்மனையின் தேவஸ்வம் அதிகாரிகளிடமில்லை. இவ்வாண்டில் தமிழ்நாட்டு அன்பர்கள் ஏறக்குறைய 200 பேர்களுக்குக் கூடிவிட்டபடியால் கோவிலார் தங்கள் வசமுள்ள ஆபீசுகளையும் கோயிலுக்குள் உள்ள அறைகளையும் சத்திரத்தையும் முழுமையும் கொடுத்தும் போதிய இடம் இல்லாமல் அடியார்கள் திண்ணைகளிலும் விராண்டா முற்றங்களிலுமாகத் தங்கிக் காலம் கழிக்கவேண்டி வந்தது. ஆனால் மழை இல்லாமலிருந்தது பெருத்த உதவியாயிற்று. கொச்சி அரசாங்கத்தார் ஷை அரண்மனைக் கட்டிடத்தை இவ்விழாவுக்கு

வரும் தமிழ்நாட்டு அடியார்கள் தங்குவதற்காக விழாவின் முன்னாளும் பின்னாளும் கூட்டி 3 நாட்கள் தேவஸ்வம் அதிகாரிகள்வசம் கொடுத்தால் பேருதவியாக இருக்கும். அதற்கு விளக்குகளும் வைக்கவேண்டும். (2) மலையாள நாட்டுமக்கள் இவ்விழாவைப் பற்றியும் சேரமானார்-சுந்தர மூர்த்திகளைப்பற்றியும் தெரிந்துகொள்ளத்தக்க முயற்சிகளைக் கொச்சி அரசாங்கக் கல்வியதிகாரிகள் செய்யவேண்டிய தவசியம். அதற்காக (1) ஷை நாயன்மார்களுடைய சரித்திரங்களை எளிதான வசன நடையில் மலையாளத்தில் எழுதுவித்துப் பள்ளிக்கூடங்களில் சிறுவர் சிறுமியர்கள் தெரிந்து கொள்ளும்படிப் பாடமாக ஏற்படுத்தவேண்டும். (2) ஷை நாயன்மார்கள் பாடிய தேவாரங்களையும் நூல்களையும் மலையாள எழுத்தில் எழுதி (Transliterate) வெளியிட வேண்டும். இப்படிச் செய்தால் தேவாரப் பரிசுக்கு இன்னும் அதிகமான மாணவர்கள் போட்டிப் போட்டு நலம் பெறுவார்கள். இப்போது ஷை நாட்டுப் பள்ளிக்கூடங்களில் தமிழ் தெரிந்த மாணவர்கள்தான் போட்டியிற் கலந்து கொள்ளக்கூடியதா யிருக்கிறது. (3) இனி, இந்த விழா நாளைக் கொச்சி சமஸ்தான அரசாங்கப் பஞ்சாங்கத்திலும், கெஜட்டிலும் பிரசுரிக்கவேண்டியதும் தவிர ஷை திருநாளை அரசாங்க விடுமுறைநாளாக ஏற்பாடு செய்யவேண்டியது. இவ்வாறெல்லாம் செய்துவந்தால் நாளடைவில் இப்பெரியார்களுடைய பெருமை அந்நாடு முழுதும் பரவி மக்கள் நன்மையடைய ஏதுவாகும். அரசாங்க அதிகாரிகள் கவனிப்பார்களாக.

சேக்கிழார் நிலையம்<br>
கோயமுத்தூர்<br>
28—8—1951.

C. K. S.

——

# மதிப்புரைகள்

(சிவக்கவி மணி)

வான் விளி :—இப் பெயர் கொண்டது 5 செய்யுட்கள் கொண்டதொரு செய்யுட்டொகை தூத்துக்குடி சித்தாந்தப் பேராசிரியர் திரு. ந. சிவகுருநாத பிள்ளை அவர்களின் எழுபத்தொன்பதாவது வயதுப் பிறப்புநாளின்போது நினைவு மலராகக் கோவைகிழார் அவர்களால் இயற்றி அளிக்கப்பட்டது. வான் என்பது ஆகுபெயராய் வானத்தில் விளங்கித் திரியும் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன் முதலிய கோள்களும் மீன்களும் என்ற பொருளில் வந்தது. விளி என்பதும் அவ்வாறே ஆகுபெயராய் அந்தக் கோள்களையும் மீன்களையும் விளித்துக் கூறும் பாட்டு என்ற பொருளில் வந்தது. எனவே வான் விளி என்பது வானத்தில் விளங்கும் நாண் மீன்களை விளித்து உறுதி கூறுகின்ற பாட்டுக்களின் தொகுதி என்றவாறும். சித்தாந்தப் பேராசிரியரின் திரு முன் வந்து பணிந்து வாழ்த்தி அவரது சித்தாந்த உண்மைகளின் உறுதிப் பொருள்களைக் கேட்டால் நீங்கள் உங்களது அலைச்சல்களையும் பிறவித் துன்பங்களையும் தீர்ந்து நல்வழி எய்தி இன்பமுறுவீர். ஆகையினால் இற்றை ஞான்றே வந்து வாழ்த்தி வழிபடுங்கள் என்று நாள்கோள்களை விளித்துக் கூறும் கருத்துடன் இவை இயற்றப்பட்டுள்ளன. பிள்ளைத் தமிழ் நூல்களுள் அம்புலிப் பருவம் என்பதொரு பகுதி யுண்டு. அதில் சந்திரனை விளித்து அவ்வந் நூலின் பாராட்டப்பட்ட தெய்வம் அல்லது பெரியார்பால் வந்து அடைந்து உய்வகை பெறுக என்று சாம பேத தான தண்டம் என்ற நான்கு உபாயங்களாலும் சந்திரனை விளித்துக் கூறுதல் மரபு. இத் திருக்கருத்தினையே தொடர்ந்து ஆசிரியர் இங்கு ஞாயிறு முதலிய ஏனைய கோள்களுக்கும் மீன்களுக்கும் ஏற்றி விளிக்கின்றார். நாளும் கோளும் முதலியவை தேவச் சாதி வகைகளேயாவர். இவர்கள் யாவரும் இம் மண்ணுலகில் வந்து சிவநெறி ஒழுகி வழிபட்டே

உய்தி பெறக்கடவர் என்று சாத்திரங்கள் கூறுகின்றது. "புவனியிற் போய்ப் பிறவாமை யினுணும் போக்கு கின்றேமவமே இந்தப் பூமி சிவனுய்யக் கொள்ளுகின்ற வாறு" என்பது திருவாசகம். ஆதலின் ஆசிரியர் சித்தாந்த உண்மையினை உள்ளிட்டே இப் பாட்டுகளைச் செய்திருக்கின் றனர். சித்தாந்தப் போாசிரியரை அடுத்து வாழ்த்தி வழி பட்டால் சித்தாந்த உண்மைகள் விளங்கும். விளங்கினுல் சிவநெறி நின்று வழிபட்டுய்யலாம் என்பது கருத்து. சிவன் றிருவாக்காகிய சிவாகமக் கருத்துக்கள் நல்லாசிரியன்பால் அடுத்துக் கேட்கத் தக்கவை என்ற உண்மையும் கருதத் தக்கது. "தாணுவாய் நின்ற பரதத்துவனை யுத்த மனை யிறைஞ்சீரென்று, வேணுவார் கொடி விண்ணோர். தமை விளிப்ப போலோங்கு மிழலையாமே" என்று அருளிய ஆளுடைய பிள்ளையார் திருவாக்கும் இம்மாபினை விளக்கு கின்றது.

வான்விளி வாழ்க, சித்தாந்தப் போாசிரியர் வாழ்க.

(கிடைக்குமிடம் :—தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை.)

திருக்குறள் உரை வளம் - பொருட்பால் :—தருமபுர ஆதீன வெளியீடு. இதனை வரப்பெற்றுப் பெருமகிழ்ச்சி யடைந்தோம். முன்பு திருக்குறள் அறத்துப்பால் உரை வளம் இவ்வாதீனத்தார் வெளியிட்டபோது அதனைத் தொடர்ந்து அதுபோலவே திருக்குறளை ஏனைப் பகுதிகளை யும் இவர்கள் வெளியிட்டால் தமிழுலகுக்குப் பெரும் பயன் தருவதாகும் என்ற எமது கருத்தைத் தெரிவித்திருந் தோம். இப்பொருட்பால் உரைவளமானது முன் வெளி யீட்டின் எல்லா நலனேகளையும் கொண்டு விளங்குவதோடும் மேலும் அங்கங்கே தொகுப்பாசிரியர் குறிப்பு என்ற பகுதி யையும், தலைப்பில் அதிகாரப் பொருட் டொகுப்பும் கொண்டு விளங்குகின்றது. திருக்குறளுக்கு இப்போது கிடைக்கும் எல்லா உரைகளில் உள்ள எல்லா நற்பகுதிகளை

எல்லாம் தொகுத்து அங்கங்கே ஒருங்கே காணவும் தமிழ்ப் பயில்வோர் கற்றுப் பயன் பெறவும் பயன்றுய்க்கவும் இப் பதிப்புப் பேருதவி புரிந்துள்ளது. இப்பதிப்பு இல்லாவிடில் திருக்குறளின் பல பெரியோரது உரைகள் வெளிவாராது மாய்ந்தே போய்விடக்கூடியதா யிருக்கும். இதனை வெளியிட ஆணை தந்த ஷை ஆதீனம் மகாசந்நிதானங்கள் இதுபோலப் பலப்பல தமிழ்ப் பணிகளும் சைவப் பணிகளும் செய்து வருகின்றார்கள். அவர்கள் நீடு வாழ்க. இத்திருப்பணியில் அரிய சேவை செய்து தமிழுலகத்தைக் கடமைப்படுத்தி யுள்ளவர் ஷை ஆதீனம் வித்துவான் ஸ்ரீ தண்டபாணி தேசிகராவர். அவரும் இத்தகைய பெரும் பணிகள் செய்து நீடு வாழ்க.

இனி இதுபோலவே எஞ்சிய "இன்பத்துப் பால்" என்னும் "காமத்துப் பால்" பகுதியினையும் விரைவில் உரை வளம் வெளியிட்டு இப்பதிப்பினை நிறைவாக்கும்படி ஷை ஆதீனத்தார்களை வேண்டுகிறோம். "காமத்துப் பாலை"க் கற்கவேண்டாம். ஆதீனத் திருக்குறளினின்றும் நீக்கிவிடுக என்று கூறும் மேதைகளும் உண்டு. ஆனால் தமிழ் அகம் புறம் என்ற இரு பகுதிகளைக் கொண்டதென்பதும் அவற்றுள் அகமே அதன் சிறந்த பகுதி என்பதும் மனங்கொள்ளாது தமிழ் பேசுகின்றனர். இவர்களது தமிழ் அறியாமைக்கு இரங்குகின்றோம். தொல்காப்பியம் அகப்பொருள் இலக்கணமும், இறையினாகப்பொருள் முதலிய இலக்கியங்களும் நூல்களுமே தமிழுக்குச் சிறப்பாகிய அணிகலங்களாவன. சைவ சமய பரமாசாரியராகிய ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகளைத் "திருக்கோவையார்" என்ற அகப்பொருளு நூலினைச் செய்து தரும்படி ஸ்ரீ நடராசரே வேண்டிப் பெற்றனர் என்பது வரலாறாகும். ஆதலின் நமது இவ்வாதீனத்தார்கள் திருக்குறள் இன்பத்துப்பாலினை உரைவளத்துடன் வெளியிடுதல் பொருந்துவதேயாம். திருக்கோவையாருக்கு உரை வகுத்த பேராசிரியர் உரைமுகத்து இதுபற்றி எழுதியுள்ள கருத்துக்களையும் இம்மைக்கும் மறுமைக்கும் உறுதிபயக்கும் பொருள்களை உடையது திருக்

கோவையார் என்னும் கருத்தினையும் கண்டால் இதுபற்றி எவர்க்கும் மாறுகோள் நிகழாது.

(கிடைக்குமிடம் :—தருமபுர ஆதீனம். உயர்ந்த பதிப்பு. பக்கம் 1096. விலை ரூ. 13–8–0.)

---

## செய்தித் திரட்டு

3–9–51-ம் தேதி திருப்பனந்தாள் ஆதீனத்தில் முந்நூல் அணியும் கல்யாண நிதி என்ற ஒரு நிதி 5000 ரூபாய் மூலதனத்தில் ஏற்படுத்தி அதில் வரும் வட்டியைக்கொண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் நினைவுக்குறியாக ஒரு பரிசும், அவிநாசித் தலத்தில் இந்நூல் அணியும் கல்யாணம் நடத்த ஒரு அந்தணச் சிறுவனுக்கு உதவியும் அளிப்பதற்காக ஒரு திட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

4–9–51, 5–9–51–ம் தேதிகளில், காரைக்குடி, சிவநேசர் திருக்கூட்டத்து 28-வது ஆண்டு நிறைவு விழா குன்றக்குடி இளைய பட்டத்துச் சுவாமிகள் தொடங்கி வைக்கச் சித்தாந்த ஆசிரியர் தலைமைவகிக்கப் பு. ர. சாமிநாதன், இராஜேசுவரி யம்மையார், முத்து சு. மாணிக்கவாசக முதலியார் முதலியோர்கள் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

6–9–51. கண்டவராயன்பட்டி ஸ்ரீ பனிச்சார் உடையார் தர்மகலாசாலையில் மகாமகோபாத்தியாயர், பண்டித மணி அவர்களின் திரு உருவப்படம் சென்னை மேயரால் திறந்து வைக்கப்பட்டது. அப்போது பல பெரியார்கள் கலந்துகொண்டார்கள். பண்டித மணி அவர்கள் நீடூழி வாழ்க.

6–9–51. பெங்களூர் தண்டு கணபதி விலாச சபையில் பிள்ளையார் நோன்பு சம்பந்தமாக சொற்பொழிவுகள் நடைபெற்றன. மங்கையர் மாநாடு 7-9-51-ஆம் தேதி நடைபெற்றது.

19-9-51 அன்று கானாடுகாத்தான் சொக்கலிங்க வித்தியாசாலை 24-வது ஆண்டுப் பரிசளிப்பு விழா, கொத்த மங்கலம் திரு. சி.அ.சு.செ. செல்லப்ப செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

24-9-51 பூவாளூர் சிவன் கோயிலில் திருமுருக கிருபானந்தவாரி அவர்களால் கந்தபுராணச் சொற்பொழிவு நடைபெற்றது.

26-9-51 தருமபுர ஆதீனத்து மகாசந்நிதானம் அவர்கள் காசி யாத்திரை பூர்த்தி செய்யச் சேதுராமேசுவர யாத்திரை புறப்பட்டுப் பெருமானுக்கு வழிபாடு நடத்தி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கினார்கள்.

29-9-51 சென்னை முத்தியாலுபேட்டை உயர்நிலைப் பள்ளியில் டாக்டர் - மா. இராசமாணிக்கனார் அவர்கள் தலைமையில் ஆசிரியர் மறைமலை அடிகளார் முதலாண்டு நினைவுக் கூட்டம் பல்வேறு அமைப்புக்களின் சார்பில் நடைபெற்றது.

30-9-51 கரூர் சன்மார்க்க சங்கத்தில் திரு. தண்டபாணி தேசிகர் அவர்கள் இனிமையும் இறைமையும் என்னும் பொருள்பற்றி விரிவுரை ஆற்றினார்கள்.

1-10-51 முதல் 9-10-51 வரை திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபை கலைமகள் விழா கொண்டாடியது. தினந்தோறும் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

1-10-51 முதல் 8-10-51 வரை திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் கலைமகள் திருவிழாவில் பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

1-10-51 முதல் 9-10-51 வரை திருச்சி சைவ சித்தாந்த சபையில் கலைமகள் திருவிழாவை ஒட்டித் திரு. வாதராஜன் தலைமையில் பல புலவர்கள் பேசினார்கள்.

1-10-51 முதல் 10-10-51 வரை திருவானைக்காவல் தேவஸ்தானத்தில் கலைமகள் விழா நடைபெற்றது. அப்போது பல பெரியார்கள் பேசினார்கள்.

## சமாஜ வெளியீடுகள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| பெரியபுராணம்—அகராதியுடன் | ... | 3 | 0 |
| நாலாயிரதிவ்ய பிரபந்தம் | ... | 3 | 0 |
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் | ... | 1 | 0 |
| திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு 1 0 திருவாசகம் மூலம் | ... | 0 | 4 |
| திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி பொழிப்புரை | | 0 | 1 |
| குகார்ச்சனை திருமந்திரம் | ... | 0 | 1 |
| திருவாசகத் திரட்டு | .... | 0 | 6 |
| கந்தரநுபூதி (உரையுடன்) 0 2 முருகன் முந்நூல் | .... | 0 | 3 |
| அப்பர் திரட்டு 6 பை சம்பந்தர் திரட்டு | .... | 0 | 1 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை | .... | 0 | 12 |
| திருவாசகம்-திருச்சதகம் (பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் பேருரை ரூ. 8. அங்கத்தினருக்கு | | 7 | 0 |
| சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (பிற்பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது,] உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் துகளறுபோதம் (மூலம்) | ... | 0 | 8 |
| சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல. | ... | 0 | 2 |

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

## குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர் (12 இதழ்கள்)ஒன்று ஒரு ரூபா விதமும், முழுமலரல்லா தனி இதழ் ஓர் அணா விதமும் விற்கப்படும். வேண்டியவர் தபாற் செலவுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

[மலர் 3 (1930), 4 (1931), 14 (1941), 22 (1949)]

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street. Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 40, Muthiah Mudali Street, Vellala Teynampet, Madras-6, P.I.Card No. M. S. 81.